தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்: 147/மா/2024
நாள்: 27.05.2025

திரு. A. ராஜவேல்
தூத்துக்குடி --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர்
தூத்துக்குடி மாநகராட்சி
(2) திருமதி. A. மரிய கவிதா,
தூத்துக்குடி
(3) திருமதி M. உமா மகேஸ்வரி,
தூத்துக்குடி
--- எதிர்மனுதாரர்கள்

தூத்துக்குடி, டூவிபுரம் 2ம் தெரு, எண் 69C/1 என்கிற முகவரியில் வசிக்கும் A.ராஜவேல் என்பவரின் 21.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.08.2024 அன்று பெறப்பட்டு, 147/மா/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

ஆணை

தூத்துக்குடி, டூவிபுரம் 2ம் தெரு, எண் 69C/1 என்கிற முகவரியில் வசிக்கும் A.ராஜவேல் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகாரினை தெரிவித்துள்ளார்:-

1. “T.S.No.26/2-ல் மாநகராட்சி அனுமதி இன்றி கட்டப்படும் கட்டிடத்தின் நிலம் ஆனது ஸ்பிக் பணியாளர் Housing சொஸைட்டிக்கு TNVHSG-6 பாத்தியப்பட்ட நிலமாகும். இதன் மீது அரசு அங்கீகாரம் பெறப்பட்ட மனைகளாக பிரிக்கப்பட்டு, கடைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை போலி ஆவணம் கொண்டு சிலர் கூட்டு முயற்சியுடன் பத்திரப் பதிவு செய்தும், இதன் மீது திருநெல்வேலி சொசைட்டி பொருளாதார குற்றப் பிரிவில் புகார் செய்தும் இதன் மீது உரிய நடவடிக்கை பொருளாதார குற்றபிரிவில் FIR பதிவு செய்து உள்ளனர். FIR No.2/2024, போலி ஆவணத்தின் மீது சொசைட்டி இடத்தை முறைகேடாக பதிவு பெற்ற நபர் மற்றும் பதிவு செய்து கொடுத்த நபர் நீதிமன்ற பிணையில் வந்து உள்ளனர்.

மேற்படி எங்கள் SPIC பணியாளர் Housing சொசைட்டி TNVHSG-6, இடத்தில் உமாமகேஷ்வரி, மரியகவிதா T.S.No.26/2–ல் மாநகராட்சி உரிய அனுமதியோடு தான் கட்டிடம் கட்டுவதாக கூறி கட்டிடம் கட்டிய பட்சத்தில் இது குறித்து நான் மாநகராட்சியில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் 17.7.2021 மற்றும் 7.10.2021 கடிதம் மூலம் தகவல் கேட்ட போது, T.S.No.26/2 கட்டும் கட்டிடம் மாநகராட்சி அனுமதி பெறாது கட்டும் கட்டிடம்

எனவும், மாநகராட்சி கட்டிட அனுமதி மற்றும் வரிவிதிப்பும் குடிநீர் இணைப்பும் விதிக்கப்படவில்லை என தகவல் பதில் அறிக்கை மூலம் தந்துள்ளனர். ஆவண இணைப்பு.

List of Document SR No.1-2

2. மாநகராட்சியின் பதில் அறிக்கை மூலம் மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையர் திரு. தனசிங் மற்றும் பில் கலெக்டர் ஆறுமுகம் மற்றும் சேசுதாசன் ஆகியோர் மரியா கவிதா, உமா மகேஸ்வரி முறைபடியே அனுமதி பெற்று கட்டிட பணி செய்வதாகவும், இதற்கான ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார்கள் எனவும், ஆவணம் குறித்து நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுமாறு கூறினார்கள். இது சம்பந்தமாக நான் மதுரை உயர்நீதி மன்றத்தில் **22.11.2021–ல்** வழக்கு தாக்கல் செய்தபோது வழக்கு எண்.W.P.(M.D).20783/2021–ல் மாநகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் வழக்கில் ஆஜர் ஆகி **26/2–ல்** கட்டும் கட்டிடம் மாநகராட்சி அனுமதி இன்றி கட்டும் கட்டிடம் தான் எனவும் கட்டிட பணியை நிறுத்தம் செய்து விட்டதாகவும் கூறினார்.

3. ஆனால் **26/2–ல்** கட்டிட பணி தொடர்ந்து சேசுதாசன் பில் கலெக்டர் ஆறுமுகம் உதவி ஆணையர் துணையோடு நடந்து கட்டிடம் முழுமை அடைந்தது. மாநகராட்சி எந்த நடவடிக்கையும் இதன் மீது எடுக்கவில்லை.

4. உதவி ஆணையரிடம் மாநகராட்சியால் தரப்பட்ட பதில் அறிக்கையில் கட்டிட அனுமதி மற்றும் தீர்வை T.S.No.26/2–ல் விதிக்கப்படவில்லை என மாநகராட்சி தந்த ஆவணத்தை காட்டியபோது இது குறித்து பில் கலெக்டர் சேசுதாசன் ஆறுமுகத்தை பார்க்கும்படி உதவி ஆணையர் கூறினார்.

5. நான் பில்கலெக்டர் ஆறுமுகத்திடம் இது குறித்து கேட்டபோது, காலிமனை தீர்வை கட்டிட அனுமதி சேசுதாசன் சொல்லியே தான் வழங்கியுள்ளதாகவும் கூறினார்.

6. நான் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள பட்சத்தில் எவ்வாறு T.S.No.26/2–ல் வரிவிதிப்பு செய்தீர்கள் என்றபோது, பில் கலெக்டர் ஆறுமுகம் சேசுதாசன் சொல்லியே தான் வரிவிதிப்பு விதித்ததாகவும் சேசுதாசன் Sir தான் கட்டிட அனுமதி வழங்கியதாகவும், சேசுதாசன் முன்பு வைத்து பில் கலெக்டர் ஆறுமுகம் கூறிய போது சேசுதாசன் கோபத்தோடு ஆறுமுகத்திடம் தேவையில்லாமல் உளராதே இதை எல்லாம் உன்கிட்டே அவர் கேட்டாரா? உன் வேலையை பார் என கோபப்பட்டு கூறி விட்டு நீங்க நீதிமன்றத்தில் போய் முறையிடுங்கள், R.T.I.-யில் பதில் தந்த சாருஸ்ரீ அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வியை எங்ககிட்டே கேட்டு தொல்லை பண்ணாதீர்கள். இத்தனை நாள் கட்டிடம் கட்டும் போது என்ன செய்தீர்கள் என்றும் கோபமாக பேசியதால் நான் உதவி ஆணையரிடம் நடந்ததை கூறியபோது சேசுதாசன் உதவி ஆணையரின் Room–க்கு சேசுதாசன் வந்து நாம் நமது வழக்கறிஞர் கருத்து கேட்டே முறைபடிதான் செய்து உள்ளோம். நீதிமன்றத்தில் போய் பார்த்து கொள்ளட்டும் அல்லது சாருஸ்ரீயிடம் போய் கேட்கட்டும் என அவதூறாக பேசினார். இதன்படி தனசிங் உதவி ஆணையரும் நீங்க நீதிமன்றத்தின் மூலமே பார்த்துக் கொள்ளுமாறு கூறினார்.

7. இதன்பின் RTI மூலம் **19.06.2023–ல்** நான் கேட்ட தகவல் மீது மாநகராட்சி பதில் அறிக்கையில் உமா மகேஷ்வரி, மரியகவிதா அவர்களது ஆவண அடிப்படையில் உமாமகேஷ்வரி, மரியகவிதா ஆகிய நபருக்கு **10.09.2020** மற்றும் **31.12.2020** காலிமனை சொத்துவரி விதிக்கப்பட்டதாகவும் மாநகராட்சி அறிக்கையில் பதில் தந்துள்ளனர். ந.க.எண் சி3/2792/2023 வ.ம.

List of Document 3

8. எனது வழக்கறிஞர் M. மணிகண்டன் **4.3.2024–ல்** மாநகராட்சிக்கு எழுதிய கடிதத்தின் மீது மாநகராட்சி பதிலறிக்கையில் T.S.No.26/2–ல் வழங்கிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட கட்டிடத்திற்கு முறையாக விண்ணப்பம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லை.

கட்டிட அனுமதிக்கும் விண்ணப்பத்தில் தான் கட்டிட உரிமையாளர் சமர்ப்பிக்கும் ஆவணம் சரிபார்க்கப்படும். தாங்கள் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்திற்கு எந்தவித ஆவணமும் பெறப்படவில்லை என மாநகராட்சி பதிலறிக்கை 28.03.2024–ல் பதில் தந்துள்ளனர். ந.க. எண் F1/15247/2021 (வ.ம.).

List of Document 4

9. ஆவணமே சரிபார்க்க மற்றும் பெறப்படாத நிலையில் எவ்வாறு ஆவண அடிப்படையில், T.S.No.26/2–ல் காலிமனை வரிவிதிப்பு 10.9.2020, 31.12.2020 விதிக்கப்பட்டது ? முறை மன்ற நடுவர் கவனத்திற்கு

List of Document 3 & 4

10. உமா மகேஷ்வரி பெயரில் காலிமனை வரி விதிப்பு 3.12.2020 (31.12.2020) நிர்ணயம் செய்யப்பட்டதாகவும் இதன் வரிவிதிப்பு எண்.138/011/902779 ? எனவும் நிர்ணயம் செய்யப்பட்டதாக ந.க. எண் சி3/3725/2023/வ.ம மாநகராட்சி பதில் அறிக்கை மூலம் தரப்பட்டு உள்ளது.

List of Document S.R. No.5

11. மரிய கவிதா பெயரில் காலிமனை வரி விதிப்பு 10.09.2020 அன்று நிர்ணயம் செய்யப்பட்டதாகவும், வரிவிதிப்பு எண்.138/011/902779 ? என 23.08.2023ல் பதில் அறிக்கையில் மாநகராட்சி தகவல் தரப்பட்டது. ந.க. எண்.சி3/3724/2023/வ.ம

List of Document SR No.6

12. SR No. இரண்டிலும் விதிக்கப்பட்ட வரிவிதிப்பு எண்.138/011/902779 என இருவருக்கும் ஒரே வரி விதிப்பு எண் விதிக்கப்பட்டுள்ளது. முறை மன்ற நடுவர் கவனத்திற்கு.

நீதிமன்றத்தில் 22.11.2021–ல் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில்,
T.S.No.26/2–ல் வரி விதிக்கப்பட்ட நாள் வரிவிதிப்பு எண் குறித்து

A. மரிய கவிதா

கதவு எண் 111/96D வரி விதிப்பு எண்.138/011/902875
வழங்கப்பட்ட நாள் 9.3.2023 குடியிருப்பு
கதவு எண் 111/96D/1 வரி விதிப்பு எண்.138/011/902882
வழங்கப்பட்ட நாள் 4.5.2023 கடை
கதவு எண் 111/96D வரி விதிப்பு எண்.138/011/901412
வழங்கப்பட்ட நாள் 9.5.2023 குடிநீர் இணைப்பு
ஆவண எண் ந.க. எண் rp3/1312/2023/வ.ம. நாள்: 4.9.2023

List of Document SR 7

M. உமாமகேஷ்வரி

கதவு எண் 111/96/C வரி விதிப்பு எண்
வழங்கப்பட்ட குடியிருப்பு

List of Document SR 8

கதவு எண் 111/96/C1 வரி விதிப்பு எண்.138/011/902886
வழங்கப்பட்ட நாள் 4.5.2023 கடை
கதவு எண் 111/96/C1 வரி விதிப்பு எண்.138/011/902887
வழங்கப்பட்ட நாள் 4.5.2023 கடை ந.க. எண்.சி3/3725/2023 List of Document SR 9
கதவு எண் 111/96/ C வரி விதிப்பு எண்.138/011/901397
வழங்கப்பட்ட நாள் 8.2.2023 குடிநீர் இணைப்பு

List of Document SR 10

13. திருநெல்வேலி Housing சொசைட்டி மாநகராட்சி ஆணையருக்கு எழுதிய கடிதத்தில் T.S. No.26/2–ல் கட்டிடம் கட்ட அனுமதி வழங்க கூடாது எனவும் ஏற்கனவே கட்டிடம் கட்டி இருந்தால் அனுமதியை ரத்து செய்ய வேண்டி, ந.க.1756/2021/A1 நாள் 20.01.2022 அறிக்கை

மூலம் எழுதிய கடிதம் தங்களுக்கு கிடைக்கவில்லை எனவும் திருநெல்வேலி சொசைட்டி கடிதத்தை மறைத்து உள்ளனர். இக்கடிதத்தின் மீது 16.02.2022 அன்று நான் நேரில் சென்று கேட்ட போது தனசிங் உதவி ஆணையர் இது சொசைட்டி இடமா வாங்கியவர்கள் சொசைட்டி உறுப்பினர் தானே இதை ஏன் பெரிதுபடுத்துகின்றீர்கள் என தெரியாதது போல் கேட்டு உள்ளார். சொசைட்டி ஆவணத்தை ந.க. 1756/2021/A1ஆவணத்தை மறைத்து விட்டனர். முறைமன்ற நடுவர் கவனத்திற்கு.

List of Document SR 11

14. இதன் பின்பு T.S. No.26/2–ல் மரியகவிதா T.M. Bank–லும், ரூபாய் 15+9 லட்சம் Housing Loan மற்றும் கடைக்காகவும் தனது ஆவணத்தை வைத்து அடமான கடன் பெற்றுள்ளார். கட்டிட அனுமதி பெற்றதாக 716/2020/F1 – 18.9.2020. Document 855/2021 Page 4 only.

List of Document SR No.12.

உமாமகேஷ்வரியும் HDFC மூலம் ரூபாய் 20 இலட்சம் T.S. No.26/2–ல் Housing Loan பெற்று உள்ளது பின்னால் E.C.–யிட்டு பார்த்தபோது தெரியவந்த நிலையில் இவ் ஆவணங்கள் பதிவு துறையில் நகல் இட்டு பார்த்ததில் மாநகராட்சி ஆணையரால் மரியகவிதா பெயரில் கட்டிட அனுமதி எண் 116/2020/F1 18.9.2020–ல் வழங்கியதாகவும் காலிமனை தீர்வை 15.09.2020 வழங்கப்பட்டதாகவும் வங்கி கடனுக்கு பத்திர அலுவலகத்தின் இவ் ஆவணம் Original வங்கிக்கு பதிவுதுறை மூலம் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்பது தெரிய வந்தது.

15. இது குறித்து நேரடியாக உதவி ஆணையர் தனசிங் அவர்களிடம் தனக்கு கொடுக்கப்பட்ட மாநகராட்சி அறிக்கையில் T.S..26/2–ல் எந்தவித கட்டிட அனுமதியும் வரிவிதிப்பும் செய்யவில்லை எனவும், List of Document SR. No.1, 2 குறிப்பிட்டும் மரியகவிதா பெயரில் காலிமனை வரிவிதிப்பு ஆவண அடிப்படையில் 10.09.2020–ல் வழங்கப்பட்டதாக மாநகராட்சி பதில் அறிக்கை தந்துள்ளது. (List of Document SR. No.3), கட்டிட அனுமதி மாநகராட்சி ஆணையரால் மரியகவிதா பேரில் Building Plan Approval No.116/2020/F1 18.09.2020–ல் வழங்கியதாகவும் மேலும் காலிமனை வரிவிதிப்பு 15.9.2020 மாநகராட்சி ஆணையரால் வழங்கியதாகவும், வரிவிதிப்பு ரசீது எண் 138/1637/2021/0005780 2014 to 2021 வங்கிக்கு சமர்பித்துள்ளதை கூறியபோது உதவி ஆணையர் தனசிங் சேசுதாசனை அழைத்து Building Approval 116/2020/F1– ஆவணங்களை காட்டியபோது (855/2021) சேசுதாசு இது நாம் வழங்கவில்லை சாருஸ்ரீ பதவியின் போது வழங்கப்பட்டு உள்ளது. இதனை குறித்து அவர்களிடம் தான் கேட்க வேண்டும் என கூறவும் தனசிங், உதவி ஆணையர், வங்கி கடனுக்காக ஏதோ போலியாக ஆவணம் தயார் செய்து என் கையெழுத்து மாதிரி யார் வேண்டுமானாலும் போடலாம் மாநகராட்சி ரப்பர் ஸ்டாம்ப் போலியாக செய்து வங்கி கடன் பெற கொடுத்து இருக்கலாம் எத்தனை மோசடி பேப்பரில் New's வருது. இதனை போய் சரி பார்ப்பது எங்கள் பணி இல்லை எனவும் இது குறித்து காவல்துறையில் புகார் செய்யுமாறு கூறினார். மாநகராட்சி அதிகாரி கையெழுத்தை உருவாக்கியும் மாநகராட்சி ரப்பர்ஸ்டாம்ப் உருவாக்கியும் போலியாக மாநகராட்சி உத்தரவை உண்டு பண்ணி அதிகாரி கையெழுத்தை போலியாக உபயோகித்தவர் மீது சம்பந்தப்பட்ட துறை தானே Sir புகார் செய்ய வேண்டும் என்று கூறியபோது இது எல்லாம் எங்கள் வேலை இல்லை நீங்க காவல் துறையில் புகார் செய்யுங்க அல்லது கட்டிட அனுமதி கொடுத்த ஆணையர் சாருஸ்ரீயிடம் புகார் செய்யுங்கள் நாங்கள் கட்டிட அனுமதி வழங்கவில்லை அதிகாரி கையெழுத்து போல் யார் வேண்டுமானாலும் கையெழுத்து போடலாம் உங்க கையெழுத்தை நான் கூட போடலாம் என்று கூறியபோது சேசுதாசன் அந்த தேதியில் சாருஸ்ரீ மாநகராட்சி ஆணையரால் கொடுக்கப்பட்டதாக தெளிவாக உள்ளது. எனவே சம்பந்தப்பட்ட நபர் இடம் கேட்க வேண்டிய கேள்வி இது எங்களுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என கூறிவிட்டனர். முறைமன்ற நடுவர் கவனத்திற்கு.

16. இதன்பின் இதுகுறித்து அன்றைய மாநகராட்சி ஆணையராக பொறுப்பு வகித்த சாருஸ்ரீ ஆணையரிடம் (தற்போது திருவாரூர் மாவட்ட ஆட்சியர் பணியில் உள்ளார்) புகார் செய்த போது மாவட்ட ஆட்சியர் மாநகராட்சி ஆணையரிடம் எனது புகார் மனு மீது நடைபெற்ற முறைகேடு குறித்து விசாரணை செய்து பதில் தரவேண்டி மூன்று முறை திருவாரூர் மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாநகராட்சி கடிதம் எழுதியும் இக்கடிதத்தின் மீது எந்த பதிலும் உதவி ஆணையர் தனசிங் மற்றும் சேசுதாசன் பில் கலெக்டர் ஆறுமுகம் பதில் தராமல் இவ்வாறு ஒரு கடிதம் தங்களுக்கு வரபடவில்லை என கூறி விட்டனர். இக்கடிதம் குறித்து பலமுறை R.T.I-யில் தகவல் கேட்டும் இதுவரை எந்த பதிலும் எனக்கு தரப்படவில்லை.

17. இது குறித்து நான்காவது முறையாக திருவாரூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்த போது எனது கடித புகார் மீது நடவடிக்கை எடுக்க கூறி மாவட்ட ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ, I.A.S. அவர்கள் நான்காவது முறையாக மாநகராட்சி ஆணையருக்கு **1.8.2024** அன்று ந.க.10965/2023/ஏ2 ஆவணத்தின் மூலம் கடிதம் எழுதி உள்ளார். இதன் நகல் இணைத்துள்ளேன்.

List of Document S.R. No.14, 15, 16, 17

18. போலியான கட்டிட அனுமதி **116/2020/F1** நாள் **18.9.2020** மற்றும் போலியாக தீர்வை **15.9.2020**–ல் வழங்கியது குறித்தும், நான் காவல் துறையில் புகார் செய்ய முற்பட்ட போது காவல் துறை மேற்படி புகார் மாநகராட்சி மற்றும் வங்கி சம்பந்தப்பட்டது என்பதால் மாநகராட்சி அதிகாரி புகார் செய்தால் மட்டுமே நடவடிக்கை எடுக்கமுடியும் என கூறி எனது புகார் மனுவை ஏற்க மறுத்தும் விட்டனர்.

19. மாநகராட்சி ஆவணம் கொண்டு மோசடி நடைபெற்றதை ஆதாரத்துடன் கூறிய போது மாநகராட்சி உதவி ஆணையர் தனசிங் சேசுதாசன் தாங்கள் புகார் செய்தால் தாங்கள் செய்த முறைகேடு போலி ஆவணம் குறித்து தெரிந்து விடும் இதனால் தங்கள் பணி பாதிக்கப்படும் என்பதால் இதன் மீது நடவடிக்கை எடுக்காமலும் காவல் துறையில் புகார் செய்யாமலும் தாங்களே உண்மையை மறைத்து எங்களுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என கூறி காவல் துறையில் புகார் செய்ய மறுத்து விட்டனர். முறை மன்ற நடுவர் கவனத்திற்கு.

20. இதனை குறித்து T.M.B. வங்கியில் புகார் செய்த போது தாங்கள் புகார் கூறும் நபர் மாநகராட்சி மூலம் பெறப்பட்ட உரிய கட்டிட அனுமதி Original ஆவணத்தினை சமர்ப்பித்துள்ளார் இதன் பேரில் நாங்கள் கடன் கொடுத்துள்ளோம். வங்கி சட்டதிட்டபடி எங்கள் வங்கி வழக்கறிஞர் மூலம் ஒப்புதல் பெற்றே கடன் வழங்கி உள்ளோம். கொடுக்கப்பட்ட உத்தரவு போலியாக அல்லது Original என்பது குறித்து மாநகராட்சி புகார் செய்தால் மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியும். தனிப்பட்ட நபர் புகார் 3வது நபர் புகார் மீது நடவடிக்கை எடுக்க இயலாது மாநகராட்சி முறைபடி வழங்கப்பட்ட ஆவணத்தின் மீதே கடன் கொடுத்துள்ளதாக கூறி புகார் மீது நடவடிக்கை எடுக்க மறுத்து விட்டனர்.

21. இவ்வாறு மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையர், பில் கலெக்டர் ஆறுமுகம், சேசுதாசன் ஆகிய மூவரும் T.S. No.26ல் இடமானது எழில் நகர் வளாகம் Spic Housing சொசைட்டி TNVHS-G6 T.S.No.26/2–ல் அனுமதி இன்றி கட்டப்படும் கட்டிடத்தின் மீது மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என நன்கு தெரிந்தும் திருநெல்வேலி சொசைட்டி சார்பாக T.S.No.26/2 சொசைட்டி கட்டிட அனுமதி குறித்து மாநகராட்சிக்கு கடித வாயிலாக ந.க.**1756/2021/A** நாள்: **20.01.2021** கடிதத்தையும் மற்றும் சாருஸ்ரீ I.A.S. அவர்கள் கடித வாயிலாகவும் மற்றும் எனது புகார் R.T.I கடிதம் குறித்தும், மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.(MD) No.20783/2021 **22.11.2021** வழக்கு நடைபெறுவது தெரிந்தும், பில்கலெக்டர் ஆறுமுகம், சேசுதாசன், உதவி ஆணையர் மூவரும் கூட்டாக சேர்ந்து மரியகவிதா, உமாமகேஸ்வரி வங்கி கடன் பெற போலி தீர்வை விதித்தும் போலி கட்டிட அனுமதியை சேசுதாசன் உதவி ஆணையர் தனசிங் பில் கலெக்டர் ஆறுமுகம் வரி விதிப்பு கட்டிட அனுமதியில் முறைகேடு செய்து உள்ளார். வழங்கியுள்ளனர்.

22. தாங்கள் செய்த தவறு யாருக்கும் தெரியாது எனவும் மேலும் சொசைட்டி கலைக்கப்பட்டு விட்டதால் சொசைட்டி மீது யாரும் வர மாட்டார்கள் என கருதி சொசைட்டியில் மூத்த உறுப்பினர்கள் தற்போது இல்லை யாருக்கும் சொசைட்டி நிலை குறித்து விவரம் தெரியாது என இவர்கள் நன்கு தெரிந்து மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட Spic Housing சொசைட்டி TNVHSG-6 மற்றும் State Bank Housing சொசைட்டி பதிவு எண். EE 374 இடத்திலும் இதுபோன்று வரி விதிப்பில் பல முறைகேடுகள் செய்து உள்ளனர்.

23. T.S. No.26/2–ல் நேர்மையோடு உண்மையாகவே தாங்கள் பணி செய்து முறையான ஆவணத்தின் மீதும் கட்டிடத்தின் மீதும் காலிமனை வரிவிதிப்பு மற்றும் சொத்துவரி முறையோடு விதிக்கப்பட்டு இருந்தால் தற்போது தங்களால் விதிக்கப்பட்ட வரிவிதிப்பை ஏன் ரத்து செய்ய வேண்டும்? முறை மன்ற நடுவர் கவனத்திற்கு

மாநகராட்சி சார்பாக இவர்கள் அறிக்கை படிவம் 1ன்படி அ.பெ.க. எண் F1/67/2020/வ.ம. 18.5.2023ல் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57ன்படி இவர்களால் வரிவிதிக்கப்பட்ட நிலையிலும் நாங்கள் மாநகராட்சியில் முறைகேடாக வரிவிதிப்பு செய்ததையும் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதையும் நாங்கள் பலமுறை காட்டியும் கூறியும் புகார் செய்தும் எதையும் கண்டுகொள்ளாமல் முறைகேடாக சுய லாபத்திற்காக மூவரும் கூட்டு சேர்ந்து T.S.No.26/2–ல் வரிவிதிப்பு கட்டிட அனுமதி கொடுத்துவிட்டு வரிவிதிப்பின் மீது தற்போது தாங்களே முன் வந்து 15 தினங்களுக்குள் கட்டிடத்தை அப்புறப்படுத்த மாநகராட்சி அறிவிப்பு நோட்டீஸ் வழங்கி உள்ளனர்.

List of Document SR No.18

24. மாநகராட்சி அனுமதி இன்றி கட்டப்படும் கட்டிடத்தின் மீது மதுரை உயர்நீதிமன்றம் வழக்கு எண் W.P.(MD) No.20783/2021 பிறப்பித்த உத்தரவு நாள்: 30.11.2023 இதன் மீது மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி நாட்களை கடத்தியும் தாங்கள் செய்த குற்றம் முறைகேடு தெரியவந்தால் தங்கள் பணி, பதவி பாதிக்கப்படும் மற்றும் நடவடிக்கை துறை வாரியாக எடுக்கப்படும் என அறிந்து உதவி ஆணையர் தனசிங், சேசுதாசன், பில் கலெக்டர் ஆறுமுகம் மேற்படி மரியகவிதா மற்றும் உமாமகேஷ்வரி ஆகியோரிடம் தங்களுக்கு வேண்டிய நபர் மூலமாக தொடர்புகொண்டு தங்கள் கட்டிடம் உயர்நீதிமன்றத்தின் மூலம் அப்புறப்படுத்த உத்தரவு ஆகி உள்ளதாகவும் இதில் இருந்து தாங்கள் கட்டிய கட்டிடம் மீட்டு வரவேண்டுமானால் காலதாமதம் இன்றி உச்ச நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்தால் மட்டுமே கட்டிடத்தை இடிப்பதை தவிர்க்க முடியும். உச்சநீதிமன்றம் சென்றால் வழக்கு முடிய பல வருடம் ஆகும். ராஜவேல் தனிப்பட்ட முறையில் உச்சநீதிமன்றத்தில் வழக்குக்கு எதிர்த்து செலவு செய்ய முன்வரமாட்டார் எனவும் அவ்வாறு வந்தால் நாங்கள் அதனை பார்த்து கொள்வதாகவும் கூறி தாங்கள் செய்த தவறுகளில் இருந்து தங்கள் பணிக்கும் எந்த பாதிப்பும் வராது அதற்குள் (உதவி ஆணையர் தனசிங்) தான் ஒய்வு பெற்று விடலாம் எனவும் தனது பதவியை பாதுகாக்க செயல்பட்டு முதற்கட்டமாக தாங்கள் T.S.No.26/2 விதித்த வரி அனைத்தும் மதுரை உச்சநீதிமன்ற உத்தரவை வைத்து 30.11.2023–ல் ரத்து செய்து உள்ளதாக குறிப்பிட்டு உள்ளார்கள்.

25. 30.11.2023 சொத்து வரியை ரத்து செய்ததாகவும் குடிநீர் இணைப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கட்டிட உரிமையாளர் SLP (C) உச்சநீதிமன்றத்தில் 3.4.2024, 4.4.2024–ல் முறையிட்டுள்ளதால் இதன் சட்ட கருத்து கேட்பதற்கு மாநகராட்சி வழக்கறிஞர் மூலம் கருத்து வழங்க கேட்டு கடிதம் எழுதி உள்ளதாகவும் ந.க. எண்.எப்/15247/2021/வ.ம. கடிதம் எழுதி உள்ளதாகவும் பதில் அறிக்கை தகவல் தரப்பட்டுள்ளது.

List of Document S. No.18.

உச்சநீதிமன்றம் in the Meantime Status quo as on Today Shall be Maintained by the Parties இதனை கடைபிடிக்காமல் மீண்டும் 26/2–ல் ரத்து செய்யப்பட்ட தீர்வை மாநகராட்சியால் புதிய பில்கலெக்டரால் மீண்டும் வரியை விதித்துள்ளனர்.

List of Document S. No.19.

26. Monday Petition மாநகராட்சியில் T.S.No.26/2-ல் முறைகேடாக விதிக்கப்பட்ட வரிவிதிப்பை விட அனுமதி மீதும் மாவட்ட ஆட்சியர் மக்கள் குறைதீர்க்கும் தீர்வானத்தில் 30/2023–ல் மனுதாக்கல் செய்தேன். மனு எண்.167/30.10.2023 இதன் மீது பதில் தரப்படவும் இல்லை. நகல் இணைத்துள்ளேன்.

List of Document S. No.20.

27. மின்வாரியத்தின் மூலம் T.S. No.26/2-ல் தீர்வை அடிப்படையில் வழங்கப்பட்ட மின்இணைப்பு உண்மை நிலவரத்தை கேட்டு வரிவிதிப்பை மாநகராட்சி ரத்து செய்த ஆவணத்தின் மீது 14.05.2024 மின்வாரியம் கடிதம் வாயிலாக மாநகராட்சிக்கு கேட்ட ஆவணம் எண் க.எண்.செ.பொ/வி.நி./ந/தெ/தூடி/புகார் மனு/ அ. எண் 1396/24 மீது வரிவிதிப்பு ரத்து குறித்து உண்மை நிலவரத்தை மின்வாரியத்திற்கு பதில் கொடுக்காமல் இக்கடிதத்தை மறைத்து உள்ளனர். உண்மை நிலையை கூறினால் மின் இணைப்பு 26/2–ல் துண்டிக்கப்படும் இதனால் T.S.No.26/2–ல் உள்ள நபர்கள் உதவி ஆணையர் மற்றும் பில்கலெக்டர் தங்களுக்கு வழங்கிய தீர்வை மீது நீதிமன்றத்திற்கு செல்வார்கள். மேலும் தாங்கள் செய்த முறைகேடு தெரிய வரும் தங்கள் பணி பாதிக்கும் என்று பதில் கொடுக்காமல் மறைத்து விட்டனர்.

List of Document S. No.21.

28. தற்போது உதவி ஆணையர் தனசிங் அவர்கள் பணி ஒய்வு பெற்றும் பில்கலெக்டர் ஆறுமுகம், மேற்குமண்டலுக்கு மாற்றப்பட்டும் சேசுதாசன் தெற்கு மண்டலுக்கும் மாற்றப்பட்டு உள்ளார்கள். 26/2–ல் நடைபெற்ற முறைகேடு மீது உதவி ஆணையர் தனசிங் மற்றும் பில் கலெக்டர் ஆறுமுகம், சேசுதாசன் மீது புகார் செய்தும் இதன் மீது தாங்கள் கடித எண் 229/மா/2024 நாள் 12.7.2024 ஆவணம் கிடைக்கப்பெற்று சில ஆவணங்கள் மூலம் தங்கள் முன்பு முறையிட்டு மனு தாக்கல் செய்து நீதி கேட்டு இம்மனுவை உண்மையாகவும், நேர்மையாகவும் பொதுநலன் கருதியும் சுயநலம் இன்றி மூத்த குடிமகன் என்ற உணர்வோடும் தங்கள் முன்பு கைகூப்பி இப்புகார் மனுவில் நீதி கேட்டு தங்கள் விசாரணைக்கு சமர்ப்பிக்கின்றேன். இதில் குறிப்பிடப்பட்ட அனைத்தும் உண்மை என உறுதி கூறுகின்றேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 23.09.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தன்னுடைய **15.11.2024** நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட எழில் நகர் தெருவில், சர்வே எண்.26/1, 26/2ற்கு ஸ்பிக் பணியாளர் குடியிருப்பில் மனைகளாக பிரிக்கப்பட்டு கடைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தினை போலி ஆவணம் கொண்டு முறைகேடாக பத்திர பதிவு செய்தும், மாநகராட்சியில் கட்டிட அனுமதி பெற்று சொத்து வரி நிர்ணயம் செய்து முறைகேடு செய்த திருமதி மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி என்பவர் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரப்பட்டுள்ள மனுவிற்கு, சர்வே எண்.26/1, 26/2ற்கு திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி என்ற பெயரில் கட்டிட அனுமதி எண்.116/2020/F1 நாள் 18.09.2020ல் வரைபட மற்றும் கட்டிட அனுமதி தூத்துக்குடி மாநகராட்சியால் வழங்கப்படவில்லை. மேலும் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தினை நிறுத்தக்கோரி இம்மாநகராட்சி நகரமைப்பு பிரிவு மூலம் திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு 09.11.2020 மற்றும் 26.05.2021ல் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது. மேலும், மேற்படி நபர்களுக்கு கட்டிட அனுமதி

இம்மாநகராட்சியால் வழங்கப்படவில்லை என தெரிவித்து திரு. ராஜவேல் என்பவருக்கு ஏற்கனவே பதில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், திருமதி. மரிய கவிதா மற்றும் திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு கிரைய பத்திரத்தின் அடிப்படையில் காலிமனை வரி விதிப்பு செய்யப்பட்டு வரி விதிப்பு எண்.138/011/902758 நாள் 03.12.2020 மற்றும் 138/011/902779 நாள் 10.09.2020-ன்படியும் காலி மனை வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும் காலி மனை வரி விதிப்பின் அடிப்படையில் திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு வரி விதிப்பு எண்.138/011/902875 நாள் 09.03.2023, 138/011/902882 நாள் 09.03.2023 மற்றும் 138/011/902858 நாள் 14.01.2023, 138/011/902886, 138/011/902887 நாள் 04.05.2023ல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.(M.D) No.20783/2021 நாள் 22.11.2021 உத்திரவிற்கு இணங்க மேற்படி மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது.

மேலும் மின்வாரியத்திலிருந்து சர்வே எண்.26/1, 26/2 ஆகிய கட்டிடத்தின் உண்மைத்தன்மை நிலை கோரப்பட்ட கடிதத்திற்கு திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோர்களின் கடை கட்டிடத்திற்கு சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். W.P.(M.D) No.20783/2021 நாள் 22.11.2021 உத்திரவிற்கு இணங்க மேற்படி சொத்து வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டதாக தெரிவித்து 04.10.2024 அன்று இம்மாநகராட்சியிலிருந்து மின் வாரியத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மேற்படி கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி எண்.116/2020/F1 நாள் 18.09.2020ன்படி TMB வங்கியில் அடமானக் கடன் பெறப்பட்டதாக கூறப்படும் கடை கட்டிடத்திற்கு திருமதி.மரிய கவிதா, க/பெ.அந்தோணிராஜ், திருமதி.உமா மகேஸ்வரி என்ற பெயரில் இம்மாநகராட்சியிலிருந்து கட்டிட அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்று வங்கிக்கு தெரிவித்தும் மற்றும் மேற்படி அடமான கடன் பெற்றதாக கூறப்படும் மேற்படி கட்டிட வரைபட அனுமதி நகலினை இம்மாநகராட்சிக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவித்து, 06.11.2024ல் TMB வங்கிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், மரிய கவிதா மற்றும் உமா மகேஸ்வரி என்ற பெயரில் மாநகராட்சியால் கட்டிட அனுமதி எதுவும் இம்மாநகராட்சியால் வழங்கப்படவில்லை. மேற்படி திருமதி மரிய கவிதா மற்றும் உமா மகேஸ்வரி ஆகியோர்களால் கட்டிட அனுமதி வேண்டி இவ்வலுவலகத்திற்கு மனு எதுவும் செய்யப்படவில்லை. இம்மாநகராட்சியால் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட வரிவிதிப்பு எண்.138/011/902875, 138/011/902882, 138/011/902858, 138/011/20886, 138/011/902887 ஆகிய வரிவிதிப்பு எண்கள் நீதிமன்ற உத்திரவின்படி ரத்து செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.03.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.03.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 17.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"தூத்துக்குடி மாவட்டம் சங்கரபேரி கிராமத்தில் ஸ்பிக் பணியாளர் வீட்டுமனை சொஸைட்டிக்கு சொந்தமான சர்வே எண்.26/2ல் உள்ள TNVHSG-6 இடத்தை அரசு அங்கீகாரம் பெற்று மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. அம்மனைப்பிரிவில் கடைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை போலி ஆவணம் கொண்டு பத்திரப் பதிவு செய்யப்பட்டது. இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க திருநெல்வேலி சொசைட்டி பொருளாதார குற்றப்பிரிவில்

புகார் செய்யப்பட்டு, FIR No.2/2024–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. போலி ஆவணத்தின் மீது சொசைட்டி இடத்தை முறைகேடாக பதிவு பெற்ற நபர் மற்றும் பதிவு செய்து கொடுத்த நபர், நீதிமன்ற பிணையில் வந்துள்ளனர்.

<u>எனது குற்றச்சாட்டுகள்</u>

(1) திருமதி.உமா மகேஷ்வரி மற்றும் திருமதி.மரிய கவிதா ஆகியோர் கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்டு வரும் கட்டிடம் தொடர்பாக மாநகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(2) மேற்கண்ட அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மதுரை நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P.(MD) No.20783/2021 (நிலுவையில் உள்ளபோது திருமதி.உமா மகேஷ்வரி மற்றும் திருமதி.மரிய கவிதா அவர்களுக்கு சொத்து வரி, கதவு எண், குடிநீர் இணைப்புகள் 09.03.2023 மற்றும் 04.05.2023ல் முறைகேடாக வழங்கப்பட்டுள்ளது.

(3) தூத்துக்குடி மாநகராட்சியால் திருமதி.உமா மகேஷ்வரி மற்றும் திருமதி.மரிய கவிதா ஆகியோரால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மாண்பமை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்படி அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துவது தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சியால் வழங்கப்பட்ட தாக்கீதனை எதிர்த்து மேற்கண்ட நபர்கள் உச்ச நீதிமன்றம் செல்லும்வகையில் காலதாமதமாகவும் மனுதாரருக்கு சாதகமாகவும், தூத்துக்குடி மாநகராட்சி அலுவலர்கள் செயல்பட்டார்கள்.

(4) மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடத்திற்கு காலிமனை வரிவிதிப்பு, ஆவணத்திற்கு இரு ஆவண எண்கள் 1054/2020 மற்றும் 1079/2020 ஆகியவற்றிற்கு ஒரே தீர்வை எண் 138/011/902779 முறைகேடாக வழங்கப்பட்டு உள்ளதை இம்முறைமன்ற நடுவர் முன்பு மாநகராட்சி சமர்ப்பித்த ந.க.எண்.அ1/1312/2024ல் திரு.முருகன் கதவு எண் 111K/LEபோல்பேட்டை (ஸ்டேட் பாங்க் காலனி) என்ற முகவரியில் உள்ள நபருக்கு விதிக்கப்பட்ட எண்.138/011/892657 வரி விதிப்பினை இம்முறைமன்றத்திற்கு உண்மையை மறைத்து தகவல் அளிக்கப்பட்டுள்ளது. திருமதி.உமா மகேஷ்வரி மற்றும் திருமதி.மரிய கவிதா ஆகியோரின் கட்டிடத்திற்கு சொத்துவரி ரத்து செய்யப்பட்டதாக கூறப்பட்ட நிலையில் 2024–2025 வருடத்திற்கான சொத்து வரி தூத்துக்குடி மாநகராட்சியில் பற்று சீட்டு எண்.138/17/38/24–25/0009739 நாள் 17.12.2024 மூலம் கட்டப்பட்டுள்ளது.

(5) திருமதி.உமா மகேஷ்வரி மற்றும் திருமதி.மரிய கவிதா அவர்களின் பெயரில் அனைத்து தீர்வை ரத்து செய்ததை குறித்து தமிழ்நாடு மின்வாரியம் 14.05.2024ல் எழுதிய கடிதத்திற்கு 5 மாத காலதாமதமாக 04.10.2024 அன்று தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கடிதம் எழுதியுள்ளார்கள். திருமதி.உமா மகேஷ்வரி மற்றும் திருமதி.மரிய கவிதா அவர்களுக்கு அனுகூலம் புரிவதற்கு மேற்கண்ட காலதாமதத்தை தூத்துக்குடி மாநகராட்சி ஏற்படுத்தி உள்ளது என்பது உறுதியாகிறது.

திருமதி.மரிய கவிதா தனக்கு மாநகராட்சி ஆணையரால் கட்டிட அனுமதி 116/2020/F1 நாள் 18.09.2020ல் கொடுக்கப்பட்டதாக கூறிய ஆவணத்தின் மீது மாநகராட்சி நடவடிக்கை எடுக்காமல் திருமதி.மரிய கவிதாவிற்கு சாதகமாக அதன் மீது நடவடிக்கையும் எடுக்க மறைத்துள்ளனர்.

(6) அதைபோல் மனுதாரருக்கு சாதகமாக தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கிக்கும் உரிய ஆவணம் கோரி கால தாமதமாக கடிதம் எழுதியுள்ளார்கள்.

எனவே, உள்ளாட்சி முறைமன்றத்திற்கு தூத்துக்குடி மாநகராட்சியில் நடைபெற்ற இம்முறைகேடு குறித்தும் தீர்வை ரத்து செய்ததாக கூறி முறைமன்ற நடுவம் முன்பு தவறான பதிலை கூறியும் திருமதி.உமா மகேஷ்வரி மற்றும் திருமதி.மரிய கவிதாவிடம் 2024 டிசம்பர்க்கான தீர்வை பெற்றும் பொய்யாக ரத்து செய்ததாக கூறி உண்மையை மறைத்தும் மாநகராட்சியால் வழங்கப்பட்டதாக கூறும் கட்டிடத்திற்கான போலி அனுமதி 116/2020/F-1 நாள் 18.09.2020 தயார் செய்த போலியான ஆவணம் காலி மனை தீர்வை விதித்தும், நீதி மன்ற வழக்கு நிலுவையில் உள்ள போது நீதிமன்றத்தை மதிக்காது சொத்துவரி கதவு எண், குடிநீர் இணைப்பை இவைகளை வழங்கியும் முறைகேடாக செயல்பட்ட தூத்துக்குடி மாநகராட்சி முன்னாள் மற்றும் இந்நாள் சம்பந்தப்பட்ட அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

6. மேலும், மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முன்பு 17.03.2025 அன்று நேரடியாக ஆஜர் ஆகி, சமர்ப்பித்த தனது எழுத்துபூர்வமான வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

எனது புகார் மனு மீது தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டல உதவி ஆணையர், ஊராட்சி அமைப்புகள் ஆம்புஸ்மேன் உதவி பதிவாளர் அவர்களுக்கு ந.க. எண் அ1/1312/2024 நாள் 15.11.2024 அன்று பதிலறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இவ்வறிக்கையில் உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதா கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தின் மீது மாநகராட்சி நிறுத்தக்கோரி 09.11.2020 மற்றும் 26.5.2021 அறிவிப்பு சார்பு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டு பதில் சமர்ப்பித்துள்ளார்கள்.

1) மாநகராட்சி அனுமதியின்றி மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது மாநகராட்சி தானாக முன்வந்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கு மாநகராட்சி துணை போயுள்ளது.
2) மாநகராட்சி அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மதுரை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள போது, மாநகராட்சி எவ்வாறு உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதா அவர்களுக்கு சொத்து வரி, கதவு எண் மற்றும் குடிநீர் இணைப்புகள் 09.03.2023 மற்றும் 04.05.2023–ல் எவ்வாறு வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்து முறைமன்ற நடுவம் அவர்கள் சமூகத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

கிரைய ஆவண அடிப்படையில், உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதாவுக்கு காலி மனை வரிவிதிப்பு 138/011, 902758 நாள் 03.12.2020 மற்றும் 138011/902779 நாள் 10.09.2020 அன்று காலி மனை வரி விதிக்கப்பட்டதாக பதில் தந்துள்ளனர்.

1) மாநகராட்சியால் எனக்கு தரப்பட்ட RTI தகவல் அறிக்கை ந.க. எண் சி3/3724/2023/வ.ம. மரிய கவிதா பெயரில் காலி மனை வரி விதிப்பு எண் 138/011/902779 எனவும் காலி மனை வரிவிதிப்பு நிர்ணயம் 10.09.2020–ல் செய்யப்பட்டதாக தகவல் ஆவணம் மூலம் பதில் தரப்பட்டுள்ளது.
2) இது போன்று உமாமகேஷ்வரிக்கும் கிரைய ஆவண அடிப்படையில் காலி மனை வரிவிதிப்பு 138/11/902779 என 03.12.2020–ல் வழங்கப்பட்டதாகவும், ந.க. எண் சி3/3725/2023/வ.ம. மாநகராட்சியால் தகவல் பதில் தரப்பட்டுள்ளது.
3) முறைமன்ற நடுவம் முன்பு மாநகராட்சி காலி மனை வரி விதிப்பு (இரு ஆவண எண் 1054/2020 மற்றும் 1079/2020) ஆவணத்திற்கு ஒரே தீர்வை எண் 138/011/902779 என எவ்வாறு வழங்க இயலும் என்பதையும் முறைமன்ற நடுவர் மன்றத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். (ஆதாரம் புகாரில் இணைத்துள்ளேன்.)

4) மேலும் மாநகராட்சி காலிமனை வரிவிதிப்பு முறைகேடாக செய்ததை மறைத்ததை முறைமன்ற நடுவர் முன்பு காலி மனை ஒரே விதமாக வரி விதிப்பு உள்ளதை மறைக்கும் பொருட்டு 138/011/902758 என வேறு ஒரு நபருடைய வரிவிதிப்பினை பதிவு செய்து முறைமன்ற நடுவர் முன்பு பொய்யாக கூறியுள்ளனர்.

5) அவ்வாறு விதிக்கப்பட்ட காலிமனை வரி விதிப்பு எண் 138/011/902758 ஆனது N முருகன் கதவு எண் 111K/LK போல்பேட்டை (ஸ்டேட் பாங்க் காலனி) என்ற முகவரியில் உள்ள நபருக்கான விதிக்கப்பட்ட வரி விதிப்பு ஆகும் என்பதையும் முறைமன்ற நடுவர் கவனத்திற்கு உரிய ஆவணத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதா ஆகியோர் கிரைய ஆவணப்படி காலிமனை வரிவிதிப்பு 10.09.2020 மற்றும் 31.12.2020–ல் காலி மனை வரிவிதிப்பு செய்து இதன் அடிப்படையில் சொத்துவரி 14.11.2023 மற்றும் 09.03.2023 வரி விதிக்கப்பட்டதாகவும் தங்கள் கடிதத்தில் சமர்ப்பித்துள்ளார்கள். எனக்கு RTI மூலம் தகவல் தரப்பட்ட பதிலில் ந.க. எண் சி3/2792/2023/வ.ம. மாநகராட்சி கடிதத்தின் மூலம் தகவல் தந்துள்ளனர். இதன் நகல் புகாரில் இணைத்துள்ளேன்.

1) எனது வழக்கறிஞர் M. மணிகண்டன் மாநகராட்சிக்கு அனுப்பிய கடிதத்திற்கு மாநகராட்சி ந.க. எண் F-1/15247/2021/வ.ம. நாள் 25.03.2024–ல் தந்த பதில் கடிதத்தில் புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட T.S. No.26/2–ல் கட்டிடத்திற்கு எந்தவித கிரைய ஆவணமும் மாநகராட்சி பெறப்படவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

2) ஆவணங்கள் பெறப்படாமல் காலிமனை தீர்வை மற்றும் சொத்து வரி, கதவு எண், குடிநீர் இணைப்பு உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதா பெயரில் வழங்கப்பட்டது என்பது குறித்து முறைமன்ற நடுவர் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். இதன் ஆவணங்கள் யாவும் புகாரில் இணைத்துள்ளேன்.

மதுரை உயர்நீதி மன்ற வழக்கு எண் WP (MD) 20783/2021 நாள் 21.11.2021 நீதிமன்ற உத்தரவிற்கு இணங்க மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்துவரி அனைத்தும் ரத்து செய்ததாக மாநகராட்சி பதிலறிக்கையில் முறைமன்ற நடுவம் முன்பு சமர்ப்பித்த பதிலறிக்கை முற்றிலும் தவறானது. மேலும் முறைமன்ற நடுவம் விசாரணையை குழப்பத்தை உண்டு பண்ண இவ்வாறு பதிலறிக்கை செய்துள்ளனர். இதனை முறைமன்ற நடுவம் மற்றும் யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள் என இவ்வாறு தவறான பதிலை குறிப்பிட்டுள்ளனர்.

1) WP (MD) 20783/2021 நாள் 21.11.2021 என்னால் தொடரப்பட்டுள்ள வழக்கில் மதுரை உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நாள் 04.12.2023 ஆகும். மேலும் தீர்வை ரத்து செய்யப்பட்டதாக முறைமன்ற நடுவம் முன்பு சமர்ப்பித்த பதில் முற்றிலும் தவறாகும் என்பதையும் இதற்கான ஆதாரத்தையும் தங்களிடம் விசாரணையில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் தமிழ்நாடு மின்வாரியத்தில் உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதா பெயரில் அனைத்து தீர்வையும் ரத்து செய்யப்பட்டது குறித்து உண்மையறிய தமிழ்நாடு மின்வாரியம் மாநகராட்சிக்கு இதுகுறித்து 14.05.2024–ல் உண்மை நிலையை சொத்து வரி குறித்து எழுதிய கடிதத்தில் காலதாமதம் (5 மாதம்) செய்து 04.10.2024–ல் ந.க. எண். அ2/1312/2024 கடித வாயிலாக பதில் தெரிவித்து உள்ளனர். வேண்டும் என்றே மின் இணைப்பை துண்டிக்கக் கூடாது எனவும், உச்சநீதிமன்ற வழக்கிற்கு ஏற்றார்போல் எதிர் தரப்பினருக்கு மாநகராட்சி உதவியுள்ளனர்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதாவால் மாநகராட்சியில் நடைபெற்ற ஊழல் வெளியாகும் என்பதால் மின்வாரியத்திற்கு பதில் கொடுக்காமலும், போலியான கட்டிட அனுமதி எண் 116/2020/F1, 18.09.2020 மீதும் மாநகராட்சி நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளனர்.

தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் மரியகவிதா மாநகராட்சி ரப்பர் ஸ்டாம்பு மற்றும் மாநகராட்சி அரசு அதிகாரிகளின் கையெழுத்து போலியாக உருவாக்கிய பில்டிங் பிளான் குறித்து பலமுறை நான் மாநகராட்சிக்கு கடித வாயிலாகவும், நேரில் சென்று புகார் செய்த போது, இதன்மீது மாநகராட்சி உடந்தையாக உள்ளதால் போலி பில்டிங் பிளான் அப்ரூவல் 116/2020/F1, 18.09.2020 மீது நடவடிக்கை எடுத்தால் மாநகராட்சி செய்த தவறுகள் உதவி ஆணையர், தனசிங் மற்றும் பில் கலெக்டர் ஆறுமுகம், சேசுதாசன் மற்றும் ராமச்சந்திரன் மாநகராட்சி அதிகாரிகள் செய்த முறைகேடு வெளியே வரும் என்பதால் இந்த போலி ஆவணத்தின்மீது இது குறித்து நடவடிக்கை எடுக்காமல் இருந்து வந்தனர் என்பதையும் முறைமன்ற நடுவம் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

மரியகவிதா மற்றும் உமாமகேஷ்வரி மாநகராட்சி அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு முறையற்ற முறையில் காலி மனை தீர்வை சொத்து தீர்வை கதவு எண்கள், மற்றும் குடிநீர் இணைப்பு மற்றும் போலியான கட்டிட அனுமதி இவை அனைத்தும் மாநகராட்சி கவனத்தின் கீழ் உதவி ஆணையர் மற்றும் பில் கலெக்டர் ஆறுமுகம் சேசுதாஷன் ஆகியோர் கூட்டாக சேர்ந்து செய்த முறைகேடான சம்பவமாகும்.

மேற்படி இவர்கள் செய்த தவறுகளை மதுரை உயர்நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாமல் காலதாமதம் செய்தும், மின்வாரியத்துக்கும் காலதாமதமாக வரி விதிப்பை பற்றி கூறாமலும், காலம் கடத்தியும் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியிலும், உரிய ஆவணம் கட்டிட அனுமதி 116/2020/F1, 18.09.2020 குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காமலும் மரிய கவிதா மற்றும் உமா மகேஷ்வரி ஆகிய 2 நபர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு மேல்முறையீடு செய்ய மதுரை உயர்நீதிமன்ற உத்தரவை நிலை நிறுத்தாமலும், கால அவகாசத்திற்காக காலம் கடத்தி வந்துள்ளனர் என்பதையும், முறைமன்ற நடுவம் கவனத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முன்பு 21.08.2024–ல் நான் நீதி கேட்டு புகார் செய்த பின்பே இது தெரிந்து மாநகராட்சி

1) தமிழ்நாடு மின்வாரியத்திற்கும், தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கிக்கும் கடிதம் எழுதியும் மாநகராட்சியால் விதிக்கப்பட்ட வரிவிதிப்பை ரத்து செய்துள்ளனர். ஆனால் மதுரை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் வரி ரத்து செய்ததாக ஓர் தவறான பதிலை முறைமன்ற நடுவம் முன்பு சமர்ப்பித்துள்ளனர்.

2) மேலும் உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதா ஆகியோர்களால் இவ்வலுவலகத்திற்கு (மாநகராட்சி) மனு எதுவும் செய்யவில்லை என மாநகராட்சி பதில் அறிக்கையில் முறைமன்ற நடுவம் முன்பு கடிதம் சமர்ப்பித்துள்ளனர்.

உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதா ஆகிய இரு நபர்களும் 15.09.2023–ல் மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் கட்டிடம் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பம் செய்ததாகவும், கட்டிட அனுமதிக்கான கட்டணம் உமா மகேஷ்வரி மாநகராட்சி ஆணையர் பெயரில் ரூபாய் 18,000/–

கனரா வங்கி மூலம் DD (125126) எடுத்தும், இதுபோல் மரியகவிதா மாநகராட்சி ஆணையர் பெயரில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ரூ.15,000/–க்கான DD 034349 15.09.2023–ல் எடுத்து விண்ணப்பத்தோடு இணைத்து சமர்ப்பித்துள்ளார்கள் என்பதை உச்சநீதிமன்ற வழக்கில் காட்டியுள்ளனர்.

கட்டிடத்திற்கு 15.09.2023–ல் விண்ணப்பம் செய்துள்ளதாக கூறப்படும் உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதாவுக்கு 15.09.2023–ல் சொத்து வரி காலிமனை வரி விதிப்பு மற்றும் கதவு எண்கள் குடிநீர் இணைப்பு எவ்வாறு இதற்கு முன்பு வழங்கப்பட்டது என்பது குறித்து முறைமன்ற நடுவம் கவனத்திற்கு சமர்ப்பிக்கிறேன். இதற்கான உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதா விண்ணப்ப மனு இணைத்துள்ளேன்.

எனவே, உள்ளாட்சி முறைமன்ற நடுவம் அவர்கள் மாநகராட்சியில் நடைபெற்ற இம்முறைகேடு குறித்தும் தீர்வை ரத்து செய்ததாக கூறி முறைமன்ற நடுவம் முன்பு தவறான பதிலை கூறியும் உமாமகேஷ்வரி மற்றும் மரியகவிதா–விடம் 2024 டிசம்பர்–க்கான தீர்வையை பெற்றும் பொய்யாக ரத்து செய்ததாக கூறி உண்மையை மறைத்தும், மாநகராட்சியால் வழங்கப்பட்டதாக கூறும் கட்டிடத்திற்கான போலி அனுமதி 116/2020/F1 நாள்18.09.2020 தயார் செய்த போலியான ஆவணம் காலி மனை தீர்வையை விதித்தும், நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ள போது, நீதிமன்றத்தை மதிக்காது சொத்துவரி, கதவு எண், குடிநீர் இணைப்பு இவைகளை வழங்கியும், திருநெல்வேலி ஹவுசிங் சொசைட்டி பதிவாளர் கடிதம் ந.க. 1756/2021/A1 நாள் 20.01.2022 மீதும் மதிப்பு கொடுக்காமலும் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் 4 கடிதத்திற்கும் உரிய முறைப்படி பதில் கொடுக்காமலும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கும், பதில் கடிதம் கால தாமதம் செய்து இவை அனைத்தும் முறைகேடாக செயல்பட்ட உதவி ஆணையர் மற்றும் பில்கலெக்டர் ஆறுமுகம், சேசுதாஷன் மீது உரிய நடவடிக்கை எடுத்து அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீதும் போலியா கட்டிட அனுமதி தயார் செய்த நபர்களை உண்மை கண்டறிந்து இதனை வங்கிக்கு சமர்ப்பித்த உமாமகேஷ்வரி மற்றும் மரிய கவிதா சம்பந்தப்பட்ட வங்கி ஆகியோர் மீது சட்டப்படி எடுக்க வேண்டி தங்கள் முன்பு இவ்விசாரணையில் எனது வாக்குமூலத்தை கூறி எழுத்து மூலமாக பதிவு செய்கின்றேன்.'' என தெரிவித்துள்ளார்.

7. தூத்துக்குடி மாநகராட்சி இளநிலை பொறியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோர் 17.03.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்கள்:

> ''கடைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தினை போலி ஆவணம் மூலம் முறைகேடாக கிரையம் செய்தும், பத்திர பதிவு செய்தும், தூத்துக்குடி மாநகராட்சியில் கட்டிட அனுமதி பெற்று சொத்துவரி நிர்ணயம் செய்து முறைகேடில் ஈடுப்பட்ட திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி என்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்த விவரங்களை பின்வருமாறு சமர்ப்பிக்கின்றோம்.
>
> தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட எழில் நகர் தெருவில், சர்வே எண்.26/1, 26/2ற்கு ஸ்பிக் பணியாளர் குடியிருப்பில் மனைகளாக பிரிக்கப்பட்டது தொடர்பாக திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி என்ற பெயரில் கட்டிட அனுமதி எண்.116/2020/F1 நாள் 18.09.2020ல் வரைபட மற்றும் கட்டிட அனுமதி தூத்துக்குடி மாநகராட்சியால் வழங்கப்படவில்லை. மேலும் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தினை நிறுத்தக்கோரி இம்மாநகராட்சி நகரமைப்பு பிரிவு மூலம் திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு 09.11.2020 மற்றும் 26.05.2021ல் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது.

திருமதி.மரிய கவிதா, மற்றும் திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு கிரைய பத்திரத்தின் அடிப்படையில் காலிமனை வரி விதிப்பு செய்யப்பட்டு வரி விதிப்பு எண்.138/011/902758 நாள் 03.12.2020 மற்றும் 138/011/902779 நாள் 10.09.2020–ன்படியும் காலி மனை வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும் காலி மனை வரி விதிப்பின் அடிப்படையில்

திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு வரி விதிப்பு எண்.138/011/902875 நாள் 09.03.2023, 138/011/902882 நாள் 09.03.2023 மற்றும் 138/011/902858 நாள் 14.01.2023, 138/011/902886, 138/011/902887 நாள் 04.05.2023ல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.(M.D) No.20783/2021 நாள் 30.11.2023 உத்திரவிற்கு இணங்க மேற்படி மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் மின்வாரியத்திலிருந்து பெறப்பட்ட சர்வே எண்.26/1, 26/2 கட்டிடத்தின் உண்மைத்தன்மை நிலை கோரப்பட்ட கடிதத்திற்கு திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோரின் கடை கட்டிடத்திற்கு சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். W.P.(M.D) No.20783/2021 நாள் 30.11.2023 உத்திரவிற்கு இணங்க மேற்படி சொத்து வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டதாக மின் வாரியத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும், கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி எண்.116/2020/F1 நாள் 18.09.2020ன்படி Tamil Nadu Mercantile Bank ல் அடமானக் கடன் பெறப்பட்டதாக கூறப்படும் கடை கட்டிடத்திற்கு திருமதி.மரிய கவிதா, க/பெ.அந்தோணிராஜ், திருமதி.உமா மகேஸ்வரி என்ற பெயரில் இம்மாநகராட்சியிலிருந்து கட்டிட அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்று Tamil Nadu Mercantile Bankற்கு தெரிவித்தும் அடமான கடன் பெற்றதாக கூறப்படும் கட்டிட வரைபட அனுமதி நகலினை இம்மாநகராட்சிக்கு அனுப்பி வைக்குமாறு 06.11.2024ல் Tamil Nadu Mercantile Bankக்கு தபால் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி திருமதி.மரிய கவிதா, மற்றும் திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு கட்டிட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி இம்மாநகராட்சிக்கு மனு ஏதும் விண்ணப்பிக்கப்பட வில்லை.

மேலும் மனுதாரர் தூத்துக்குடி மாநகராட்சியால் திருமதி.உமா மகேஷ்வரி மற்றும் திருமதி.மரிய கவிதா ஆகியோரால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மாண்பமை உயர்நீதிமன்றத்தின் மதுரைகிளை சென்னை உயர்நீதிமன்றத்தின் (வழக்கு எண்.W.P(MD)No.20783 of 2021 நாள் 30.11.2023) உத்தரவின்படி அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துவது தொடர்பாக திருமதி.மரிய கவிதா, மற்றும் திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு எண்.SLP(C) No.0098069/2024 மற்றும் SLP(C) No.008099/2024 தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம். தீர்ப்புகளின் நகல்களை இத்துடன் சமர்ப்பிக்கின்றோம்.'' என தெரிவித்துள்ளார்கள்.

9. இருப்பினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களான தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் மற்றும் திருமதி மரியா கவிதா மற்றும் உமா மகேஷ்வரி ஆகியோரையும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 08.04.2025 அன்று நடைபெறும் மறு விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.03.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

10. மனுதாரர் 08.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி, சங்கரபேரி கிராமம், சர்வே எண் 26 வார்டு B பிளாக் 7–ல் உள்ள மனையானது ஸ்பிக் பணியாளர் கோப்ரேட்டிவ் Housing சொஸைட்டி பதிவு எண் T.N.V.H.S.G6, அரசு அங்கீகாரம் பெறப்பட்ட மனைப் பிரிவில் கடைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை முறைகேடாக நிலவரித் திட்ட வட்டாட்சியர் மூலம் 143/2020 நாள் 09.02.2020 அன்று V. மசூத் என்னும் கலைத்தல் அலுவலர் முறைகேடாக செய்த மனு மீது M. ராமச்சந்திரன் நிலவரித் திட்ட வட்டாட்சியர் மூலம் 19.02.2020 உட்பிரிவு 26/2 என

கடைக்காக ஒதுக்கப்பட்ட மனையை உட்பிரிவு செய்து வழங்கி A. மாரியப்பராஜா, A. அந்தோணி ராஜ் ஆகிய இருவருக்கும் ஸ்பிக் பணியாளர் போன்று I.D. card மற்றும் சொசைட்டி உறுப்பினர் எண் 381, 382 என 12.2.2020 உண்டு பண்ணி 13.05.2020 SPIC பணியாளர் சொசைட்டி இடத்தை பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளனர். இதன் ஆவண எண் 905, 906/2020. இவ் ஆவணத்தின் 905/2020 அந்தோணிராஜ் என்பவர் தனது மனைவி பெயரில் 03.06.2020 தானே பத்திரமாக பதிவு செய்து கொடுத்துள்ளார். இதன் ஆவண எண் 1079/2020. 906/2020 நாள் 13.05.2020 மாரியப்பராஜா பெயரில் பதிவு செய்த ஆவணத்தை பொன்னுதுரை பெயரில் 14.05.2020 மறுதினமே பவர் பத்திரம் செய்து கொடுத்துள்ளார். இதன் ஆவண எண்919/2020. பொன்னுதுரை தான் பவர் பெற்ற ஆவணத்தை உமாமகேஷ்வரி பெயரிலும், முத்துகிருஷ்ணன் பெயரிலும் 27.05.2020 அன்று பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார். உமாமகேஷ்வரி பத்திர எண்.1054/2020. முத்துகிருஷ்ணன் பத்திர எண்.1055/2020 ஆகும். இம்முறைகேடு பத்திர பதிவு குறித்து மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு பதிவாகி வழக்கு எண்.W.P.(MD) No.20784/2021. இதன் தீர்ப்பு நாள் 17.08.2022–ன் அடிப்படையில் திருநெல்வேலி Housing சொசைட்டி விசாரணை செய்து போலி ஆவண பதிவு உறுதி செய்யப்பட்டு பொருளாதார குற்ற பிரிவில் புகார் அந்தோணிராஜ், மாரியப்பராஜா, V. மசூத் ஆகியோர் மீது விசாரணை நடைபெற்று F.I.R. 2/2024 பதிவாகி திருநெல்வேலி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது. மேற்படி எங்கள் ஸ்பிக் சொசைட்டி இடத்தின் மீது மரிய கவிதா மற்றும் உமாமகேஷ்வரி, மாநகராட்சி அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது சொசைட்டி உறுப்பினர் பங்குதாரர் என்ற அடிப்படையில் புகார் செய்த போது நாங்கள் மிரட்டப்பட்டதால், மேலும் கட்டிட பணிதொடர்ந்து செய்து வந்ததாலும், மாநகராட்சி நடவடிக்கை எடுக்காததாலும், மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்தேன். வழக்கு எண் W.P. (MD) No.20783/2021. இதன் மீது விசாரணை நடைபெற்ற போது உமாமகேஷ்வரி மற்றும் மரிய கவிதா பெயரில் கட்டிட அனுமதி வழங்கப்படவில்லை எனவும், காலிமனை வரிவிதிப்பு, மரிய கவிதா மற்றும் உமாமகேஷ்வரி பெயரில் கிரைய ஆவண அடிப்படையில் 10.09.2020 மற்றும் 31.12.2020 வழங்கப்பட்டதாகவும், இருவரின் வரி விதிப்பும் 138/011/902779 என ந.க. எண் சி3/3725, ந.க. எண். சி3/3724 நாள் 23.08.2023 அன்று R.T.I. மூலம் தகவல் தந்து உள்ளனர். எவ்வாறு ஒரே வரி விதிப்பு எண் இருவருக்கும் கொடுக்க முடியும் என்பதை மாமன்ற நடுவம் முன்பு வினவியுள்ளேன்.

மேலும், திருநெல்வேலி Housing சொசைட்டி மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் ந.க. 1756/2021/ஈ1 நாள் 20.01.2022 கடிதத்தில் T.S. 26/2 TNVHSG-6 ஸ்பிக் பணியாளர் கூட்டுறவு வீட்டு வசதி இடமானது சங்கத்திற்கு சொந்தமான இடம் எனவும் முறைகேடாக பத்திர பதிவு செய்து உள்ளனர் எனவும் இவ்விடத்தில் கட்டுமான கட்ட அனுமதி வழங்க கூடாது எனவும் கட்டிடம் ஏற்கனவே கட்டப்பட்டு இருந்தால் அதற்கான அனுமதியை ரத்து செய்ய மாநகராட்சி ஆணையருக்கு திருநெல்வேலி சொசைட்டி 04.12.2024 கடிதம் எழுதியுள்ள நிலையிலும் நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் CMDA வளாகம், சென்னை 17 அவர்கள் 29.10.2021 இணை இயக்குநர் தூத்துக்குடி மாவட்ட ஊரமைப்பு அலுவலகத்திற்கு எழுதிய கடிதத்தின் மீது ஒ.மு.ந.க.எண்.20710/2021/T.C.P 6 எழுதிய கடிதத்தின் மீது மாவட்ட நகர் ஊரமைப்பு ஆணையர் மாநகராட்சி அவர்களுக்கு அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க கோரி எழுதிய ந.க.எண்.3152/2021/தூமாஅநி நாள் 27.12.2021 திருவள்ளூர் ஆண்டு 2052 மார்கழி 2 கடிதத்தின் கடிதம் சமர்ப்பித்த நிலையிலும் மாநகராட்சி உதவி பதிவாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு ஆம்புஸ்மேன் அவர்களுக்கு 15.11.2020 ந.க.எண்.அ1/1312/2024 எழுதிய கடிதத்தில் அனுமதியில்லாமல் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தினை நிறுத்த கோரி இம்மாநகராட்சி நகர அமைப்பு பிரிவு மூலம் திருமதி.மரிய கவிதா மற்றும் உமா மகேஸ்வரி ஆகியோர்க்கு 19.11.2020 மற்றும் 26.5.2021

அறிவிப்பு சார்வு கொடுக்கப்பட்டதாகவும் பதில் கடிதம் சமர்ப்பித்ததில் அனைத்து வேண்டுகோளுக்கும் இணங்க மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்காமல் உமா மகேஸ்வரி மற்றும் மரிய கவிதாவுக்கு **09.03.2023** மற்றும் **14.1.2023, 04.05.2023**–ல் சொத்து வரி, குடிநீர் இணைப்பு கதவு எண் முறைகேடாக அங்கீகாரம் பெறப்பட்ட மனையில் முறையாக மரிய கவிதா, உமா மகேஸ்வரி கட்டிடம் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது மாநகராட்சி முறைகேடான முறையில் குறுக்கு வழியில் வரி விதிப்பு, குடிநீர் இணைப்பு கதவு எண் வழங்கியுள்ளனர். மேலும் ஆவணத்தின் அடிப்படையில் **10.09.2020–31.12.2020** காலி மனை வரி விதிப்பு செய்ததாக கூறுகின்றனர். **31.12.2020**–ல் உமா மகேஸ்வரி ஆவணங்களின்படி அந்த இடம் காலி மனை வரி விதிப்பு செய்யப்பட்டதாக கூறும் நாள் **31.12.2020**–ல் ஸ்டேட் பாங்க் ஹவுசிங் சொசைட்டிக்கு சொந்தமான இடம் உமா மகேஸ்வரிக்கு காலி மனை வரி விதிப்பின் அடிப்படையில் ந.க.எண் சி3/2792/2023வ.ம நாள் 04.12.2023 RTI தந்த தகவலின்படி காலி மனை வரி விதிப்பில் அடிப்படையில் **14.01.2023** மற்றும் 09.03.2023–ல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்ட இடம் ஸ்பிக் சொசைட்டி இடம் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடமும் ஸ்பிக் சொசைட்டி இடம் மற்றும் மாநகராட்சி ஆவண எண். 1054 மற்றும் 919/2020 ஆவணங்களின்படி State Bank Housing Society என்றே உள்ளது. இதனை மாநகராட்சி ஆவணங்களை பார்க்காமலேயே காலி மனை வரி விதிப்பு மற்றும் சொத்து வரி விதித்தது, முறைகேடான விதித்த சம்பவமாகும் என்பதையும் மாமன்ற நடுவர் முன்பு சமர்ப்பிக்கின்றேன். மேலும் மாநகராட்சியில் உமா மகேஸ்வரி மற்றும் மரிய கவிதா ஆகிய இரு நபர்களும் 15.09.2023–ல் மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் கட்டிட அனுமதி வேண்டியும் இதற்காக உமா மகேஸ்வரி கனரா வங்கி யில் ரூபாய் 18,000/–க்கான DD No.15526-ம் மரிய கவிதாவும் இது போன்று **15.09.2023**ல் கட்டிட அனுமதி வேண்டி ரூ.15,000/–க்கான DD, State Bank DD 036349 எடுத்து கட்டி அனுமதி வேண்டி விண்ணபித்து உள்ளார்கள். **15.09.2020** கட்டிட அனுமதி கேட்டு விண்ணபத்திற்கு முன்பே மரிய கவிதா பெயரில் குடியிருப்பு மற்றும் கடைக்கான தீர்வை **138/011/902875, 138/011/902882** நாள் **09.03.2023** மற்றும் உமா மகேஸ்வரி பெயரில் **138/011/902858** நாள் **14.01.2023** கடைத்தீர்வை 108/011/902886, 138/011/902887 நாள் **04.05.2023** இத்தீர்வை எவ்வாறு வழங்கப்பட்டது என்பது குறித்து முறைமன்ற நடுவம் முன்பு சமர்ப்பிக்கின்றேன். மேலும், 18.09.2020 மாநகராட்சி ஆணையர் அவர்கள் மரிய கவிதா பெயரில் கட்டிட அனுமதி **எண்.116/2020/F1** அன்று வழங்கப்பட்டு இருந்ததால் இவ்கட்டிட அனுமதி இருக்க **15.09.2023**ல் எதற்காக கட்டிட அனுமதி கேட்டு மாநகராட்சியில் விண்ணப்பித்தார்கள் என்பதையும் மாமன்ற நடுவம் முன்பு சமர்ப்பிக்கின்றேன். மேலும் உமா மகேஸ்வரி மற்றும் மரிய கவிதா ஆகிய இருவருக்கும் கட்டிட அனுமதி மாநகராட்சியால் வழங்கப்படாமலும் உமா மகேஸ்வரி மரிய கவிதா ஆகிய இருவரும் **15.09.2023** கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பம் செய்வதற்கு முன்பே மாநகராட்சியில் மரிய கவிதா குடிநீர் மற்றும் கழிவு நீருக்கான **138/011/902858** ரசீதுடன் **ரூ.10,000/**–ம் பிளஸ் ரூ.5,000/– **25.1.23** கட்டிட அனுமதி பெறாத கட்டிடத்தின் மீது டெபாசிட் இருநபர் மரியகவிதா மற்றும் உமா மகேஸ்வரியும் பெற்றுள்ளார்கள். கட்டிட அனுமதி கேட்டு விண்ணப்பித்திற்கும் முன்பே எவ்வாறு இந்த டெபாசிட்களை ஏற்றுக்கொண்டார்கள் என்பதை முறைமன்றம் முன் சமர்ப்பிக்கின்றேன். மேலும் மரிய கவிதாவுக்கு மாநகராட்சி **18.09.2020** கட்டிட அனுமதி எண்.116/2020/F1 மாநகராட்சி வழங்கப்படவில்லை. ஏனெனில் நான் **2021** முதல் இம்முறைமன்றம் முன் பலமுறை புகார் செய்தும் இதன் மீது சம்மந்தப்பட்ட நபர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நான் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முன்பு எனது நிலையை குறித்து மாநகராட்சியில் வரி விதிப்பு மற்றும் கட்டிட அனுமதி மீது காவல் துறையில் புகார் செய்தால் விசாரணையில் தாங்களும் பாதிக்கப்படுவோம் என நிலையை அறிந்து **116/2020/F1** நாள் **18.09.2020** கட்டிட அனுமதி ஆவணத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல்

காலத்தை 2021 முதல் நடவடிக்கை எடுக்காமல் மறைத்து வந்தனர். எனது 21.08.2024 தமிழ்நாடு முறைமன்றம் நடுவம் முன்பும் எனது புகாருக்கு பின்பே தாங்கள் செய்த தவறை மறைக்க தற்போது செயல்படுகின்றனர் என்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, பொய்யான கிரைய ஆவணத்தை வைத்து காலிமனை வரி விதித்து, அதே போல் பொய்யான கட்டிட அனுமதி அளித்து அதனை பயன்படுத்தி சொத்துவரி, குடிநீர் முன் பணத் தொகையும், கழிவு நீர் சாக்கடை ரசீதும் அதேபோல் கட்டிட அனுமதி கோரி 15.09.2023–க்கு முன்பே மேற்கண்ட முறைகேடு அனைத்தும் நடைபெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தூத்துக்குடி மாநகராட்சி அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

11. எதிர்மனுதாரர்களில் திருமதி மரியா கவிதா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தில் 08.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

12. எதிர்மனுதாரர்களில் திருமதி உமா மகேஷ்வரி என்பவரின் கணவர் திரு. முருகன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தில் 08.04.2025 அன்று நடைபெற்ற மறு விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வார்டு B, Block-7, T.S. No.26/2–ல் அமைந்துள்ள 1.535 சென்ட் நிலத்தை, தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தாலுகா, முத்துகிருஷ்ணாபுரம், 10 வது தெரு, 47–ம் நம்பர் வீட்டில் வசிக்கும் பவர் ஏஜெண்ட் திரு. P. செல்வராஜ் அவர்கள் குமாரர் S. பொன்னுதுரை அவர்களிடமிருந்து தூத்துக்குடி பத்திர அலுவலகம் பத்திர ஆவணம் 1054/19 மூலம் கிரையம் பெற்றோம். இவ்விடத்திற்கான சொத்து வரி, தண்ணீர் வரி போன்றவை முறையாக தூத்துக்குடி மாநகராட்சிக்கு செலுத்தி வருகிறேன். இந்நிலையில், எனது இடத்திற்கான வரி விதிப்பினை ரத்து செய்ததாக தூத்துக்குடி மாநகராட்சியின் தாக்கீது அளிக்கப்பட்டது. அதனால், உச்சநீதி மன்றத்தில் இது தொடர்பாக SLP(C) No.8069 of 2024 வழக்கு தாக்கல் செய்து, Stay Order பிறப்பிக்கப்பட்டு, நிலுவையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மேற்கண்ட இடமானது முறையாக பத்திர பதிவு செய்து கிரையம் பெற்று உள்ளேன் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

13. மேலும், மேற்கண்ட மூன்றாவது எதிர்மனுதாரர் திருமதி உமா மகேஷ்வரி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முன்பு 08.04.2025 அன்று அன்னாரின் கணவர் திரு. முருகன் மூலம் சமர்ப்பித்த எழுத்துபூர்வமான வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

1) The appeal filed by the Appellant is not maintainable either in law or on facts of the case and it is liable to be dismissed in limine.

2) The Appellant right from the beginning has been challenging the allotment and sale of plot in question in favour of this respondent by a Co-operative Society. He is also challenging the construction of building on the said land by the 3rd respondent done without permission under the Tamil Nadu Town and Country Planning Act. The Honourable Madurai

Bench of Madras High Court in and by its order dated 30.11.2023 in W.P. (MD) No.20783 of 2021 has held that so far as the question of title is concerned it would not go into the same since the validity of the allotment and sale made by the Co-operative Society falls within the jurisdiction of the competent authority under the Tamil Nadu Co-operative Societies Act. So far as the second question of building built in the said land without prior permission, a notice under Sec.56 of the Act was issued and immediately this respondent has applied for permission under Sec.49 of the act to the competent authority seeking to retain the building until her regularization application is decided finally. But the said application was not considered by the Director of Town and Country Planning.

3) Therefore, this respondent had filed WP (MD) No24938 of 2023, seeking a direction for grant of building permission on the basis of her application dated 15.09.2023. The Commissioner of Municipal Corporation contended before the Court that such application for regularization should be made only online. This respondent submitted that she was encountering difficulties in uploading the application online. Therefore the Honourable High Court gave liberty to resubmit her application with demand draft for Rs.18,000/- and with direction to the Commissioner to accept such offline application and pass order thereon within a period of 10 weeks from the date of receipt of the copy of the order of the Hon'ble High Court. The order of the High Court has become final as the same was not challenged. Further, no order has been passed on the offline application submitted by this respondent with a DD for Rs.18,000/-

4) While so, Appellant A. Rajavel along P. Selvaraj and D. Simmerson, out of avarice, greed, malice and evil motive have filed a Writ Petition W.P. (MD) No.20793 of 2021 before the Honourable Madurai Bench of Madras High Court directing the respondents (1) Thoothukudi Municipal Corporation, 2) The Asst.Commissioner, Thoothukudi Municipal Corporation, 3) The Asst.Engineer, Thoothukudi Municipal Corporation and 4) the Director of Town and Country Planning Chennai to demolish the construction made without permission by this respondent. The Honourable Madurai Bench of Madras High Court in and by its order dated 30.11.2023 has directed the 1st respondent to initiate immediate action for demolition of the building and that the said action shall be done without reference to the application made under Se.56(3) by this respondent as the same is not maintainable and it will not be a bar to proceed further in

exercise of the statutory powers and that the said exercise shall be completed within a period of eight weeks from the date of receipt of a copy of the order. Against the above order, this respondent has preferred SLP No.8099/2024 before the Honourable Supreme Court of India and the following order was passed on 13/05/2024:

> "Application for exemption from filing official translation is allowed. Issue notice. In the meantime, status quo as on today shall be maintained by the parties."

5) The main contention of this respondent before the Honourable Supreme Court is that the Honourable Madurai Bench of Madras High Court has misinterpreted Sec.56(3) and 49 of the Tamil Nadu Town and Country Planning Act and taken an erroneous view that Sec.56(3) is applicable only to a case where deviation had occurred after obtaining building permission. The above interpretation is completely contrary to the spirit and object of the said provision. The very object of the provision is to save the building from being demolished until a final decision is taken on the application for regularization because a buiding demolished cannot be retrieved, in the event of subsequent order of regularization. Therefore the above provision is enacted only in order to avoid the callosal waste that amounts to the loss of economy.

6) It is pertinent to point out here that the application filed by this respondent for regularization and for compliance of all conditions is still kept pending without assigning any reason by the Authority concerned inspite of the direction of the Honourable High Court direction.

7) Further, the appellant is a third party and he is no way connected to the matter between this respondent and the Tuticorin Corporation and he has been, right from the beginning, questioning the validity of the vacant land tax assessment and building tax assessment made by Tuticorin Corporation in the name of the 3rd respondent.

8) The very purpose of the enactment of this Humble Ombudsman body is to look into the grievances of the people from the action of the officials of the Panchayats, Municipal and Corporations. The appellant is not an affected party from the action of the Local bodies nor he has any personal grievance against this respondent and the Tuticorin Corporation and he is a third party to the issue involved in this case and no application from him can be entertained.

9) The main aim of the appellant is to see that the building constructed by this respondent is demolished and he has been out of malice and ill-will fully motivated to see the destruction of the building. The appellant is a man of bad character and he used to laugh at when the house adjacent owner is burning.

10) The Status quo order granted by the Honourable Supreme Court is in force till now and it is confined only to put up further construction or taking up any further activity in connection with the grant of permission. It has no connection whatsoever for collection of tax for vacant land or for the building or for the drinking water and the appellant's motive of preventing collection of tax through this Forum cannot succeed because tax is the main revenue for running the affairs of Corporation and the Hon'ble Supreme Court order of status quo cannot be translated as a bar to collection of tax.

11) This Honourable Forum has no jurisdiction to try any such appeal from the Appellant, third party, because the matter is already seized of in the Honourable Supreme Court and any order passed by this Forum would lead to conflicting stand warranting contempt proceedings.

12) Eventually, this respondent will be bound by the order of the Honourable Supreme Court and hence ends of justice would be best met only if the appeal filed with the intention of revenging and evil motive is dismissed.

13) It is respectfully submitted that this respondent has prima facie case on merits and law before the Honourable Supreme Court of India.

14) The appellant has come before this Forum with unclean hands and he is not entitled to any relief.

PRAYER:

Therefore, it is prayed that this Honourable Forum may be pleased to dismiss the appeal filed by the appellant and thus render justice.

14. தூத்துக்குடி மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் (பொறுப்பு) மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோர் 08.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்கள்:

"கடைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தினை கிரையம் செய்தும், பத்திர பதிவு செய்தும், தூத்துக்குடி மாநகராட்சியில் கட்டிட அனுமதி பெறாமல் சொத்துவரி நிர்ணயம் செய்த, திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி என்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்த விவரங்களை பின்வருமாறு சமர்ப்பிக்கின்றோம்.

தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட எழில் நகர் தெருவில், சர்வே எண்.26/2–ற்கு ஸ்பிக் பணியாளர் குடியிருப்பில் மனைகளாக பிரிக்கப்பட்டது

தொடர்பாக திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி என்ற பெயரில் கட்டிட அனுமதி எண்.116/2020/F1 நாள் 18.09.2020ல் வரைபட மற்றும் கட்டிட அனுமதி தூத்துக்குடி மாநகராட்சியால் வழங்கப்படவில்லை. மேலும் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தினை நிறுத்தக்கோரி இம்மாநகராட்சி நகரமைப்பு பிரிவு மூலம் திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு 09.11.2020 மற்றும் 26.06.2021ல் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது.

திருமதி.மரிய கவிதா, அவருக்கு கிரைய பத்திரத்தின் அடிப்படையில் காலிமனை வரி விதிப்பு எண்.138/011/902779 நாள் 10.09.2020–ன்படியும் மற்றும் உமா மகேஸ்வரி அவருக்கு காலி மனை வரி விதிப்பு எண்.138/011/902785 நாள் 03.12.2020–ன்படி காலி மனை வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 17.03.2025 அன்று நடை பெற்ற முறைமன்ற நடுவர் அவர்களிடம் சமர்ப்பித்த அறிக்கையில் திருமதி.உமா மகேஸ்வரி அவர்களின் காலி மனை வரி விதிப்பு எண்.138/011/902785–க்கு பதிலாக 138/011/902758 என தவறுதலாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் காலி மனை வரி விதிப்பின் அடிப்படையில் திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு வரி விதிப்பு எண்.138/011/902875 நாள் 09.03.2023, 138/011/902882 நாள் 09.03.2023 மற்றும் 138/011/902858 நாள் 14.01.2023, 138/011/902886, 138/011/902887 நாள் 04.05.2023ல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.(M.D) No.20783/2021 நாள் 30.11.2023 உத்தரவிற்கு இணங்க மேற்படி மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் மின்வாரியத்திலிருந்து பெறப்பட்ட சர்வே எண்.26/2 கட்டிடத்தின் உண்மைத்தன்மை நிலை கோரப்பட்ட கடிதத்திற்கு திருமதி.மரிய கவிதா. திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோரின் கடை கட்டிடத்திற்கு சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். W.P.(M.D) No.20783/2021 நாள் 30.11.2023 உத்தரவிற்கு இணங்க மேற்படி சொத்து வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டதாக மின் வாரியத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும், கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி எண்.116/2020/F1 நாள் 18.09.2020ன்படி Tamil Nadu Mercantile Bank ல் அடமானக் கடன் பெறப்பட்டதாக கூறப்படும் கடை கட்டிடத்திற்கு திருமதி.மரிய கவிதா, க/பெ.அந்தோணிராஜ், திருமதி.உமா மகேஸ்வரி என்ற பெயரில் இம்மாநகராட்சியிலிருந்து கட்டிட அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்று Tamil Nadu Mercantile Bankற்கு தெரிவித்தும் அடமான கடன் பெற்றதாக கூறப்படும் கட்டிட வரைபட அனுமதி நகலினை இம்மாநகராட்சிக்கு அனுப்பி வைக்குமாறு 06.11.2024ல் Tamil Nadu Mercantile Bankக்கு தபால் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி திருமதி.மரிய கவிதா, மற்றும் திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு கட்டிட அனுமதி வேண்டி இம்மாநகராட்சிக்கு மனு ஏதும் விண்ணப்பிக்கப்பட வில்லை.

மேலும் மனுதாரர் தூத்துக்குடி மாநகராட்சியால் திருமதி.உமா மகேஷ்வரி மற்றும் திருமதி.மரிய கவிதா ஆகியோரால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மாண்பமை உயர்நீதிமன்றத்தின் மதுரைகிளை சென்னை உயர்நீதிமன்றத்தின் (வழக்கு எண்.W.P(MD)No.20783 of 2021 நாள் 30.11.2023) உத்தரவின்படி அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துவது தொடர்பாக திருமதி.மரிய கவிதா, மற்றும் திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு எண்.SLP(C) No.0098069/2024 மற்றும் SLP(C) No.008099/2024 தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்கள்.

15. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எழுத்து பூர்வ வாக்குமூலம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் உதவியாளர் மற்றும் திருமதி உமா மகேஸ்வரி என்பவரின் கணவர் திரு. முருகன் ஆகியோரின்

வாக்குமூலங்கள் மற்றும் திருமதி உமா மகேஸ்வரி அவர்களின் எழுத்துபூர்வ வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

"தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி, சங்கரபேரி கிராமம், சர்வே எண் 26 வார்டு B பிளாக் 7–ல் உள்ள மனையானது ஸ்பிக் பணியாளர் கோப்ரேட்டிவ் Housing சொஸைட்டி பதிவு எண் T.N.V.H.S.G6, அரசு அங்கீகாரம் பெறப்பட்ட மனைப் பிரிவில் கடைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை நிலவரித் திட்ட வட்டாட்சியர் மற்றும் கலைத்தல் அலுவலர் திரு. V. மசூத் ஆகியோரின் உதவியுடன் முறைகேடாக உட்பிரிவு செய்தும், A. மாரியப்பராஜா, A. அந்தோணி ராஜ் ஆகிய இருவருக்கும் ஸ்பிக் பணியாளர் போன்று போலி I.D. card மற்றும் சொசைட்டி உறுப்பினர்களாக்கி SPIC பணியாளர் சொசைட்டி இடத்தை பத்திர பதிவு செய்து செய்யப்பட்டுள்ளது. A.அந்தோணிராஜ் என்பவர் தனது மனைவி பெயரில் 03.06.2020 அன்று தானே பத்திரமாக பதிவு செய்து கொடுத்துள்ளார். A. மாரியப்பராஜா பெயரில் பதிவு செய்த ஆவணத்தை பொன்னுதுரை பெயரில் மறுதினமே பவர் பத்திரம் செய்து கொடுத்துள்ளார். பொன்னுதுரை தான் பவர் பெற்ற ஆவணத்தை உமா மகேஸ்வரி பெயரிலும், முத்துகிருஷ்ணன் பெயரிலும் 27.05.2020 அன்று பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார். இம்முறைகேடு பத்திர பதிவு குறித்து மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P. (MD) No.20784/2021–ல் வழங்கப்பட்ட தீர்ப்பு நாள் 16.08.2022–ன் அடிப்படையில், திருநெல்வேலி Housing சொசைட்டி விசாரணை செய்து, போலி ஆவண பதிவு உறுதி செய்யப்பட்டு, பொருளாதார குற்றப் பிரிவில் A.அந்தோணிராஜ், A. மாரியப்பராஜா, V.மசூத் (கலைத்தல் அலுவலர்) ஆகியோர் மீது விசாரணை நடைபெற்று F.I.R. 2/2024 பதிவாகி திருநெல்வேலி குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது. இந்நிலையில், திருமதி மரிய கவிதா மற்றும் திருமதி உமாமகேஸ்வரி ஆகியோரது பெயரில் பதிவு செய்யப்பட்ட மேற்கண்ட ஸ்பிக் பணியாளர் சொசைட்டி இடத்தில் மாநகராட்சி அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது சொசைட்டி உறுப்பினர் பங்குதாரர் என்ற அடிப்படையில் புகார் செய்த போது மிரட்டப்பட்டதாலும், மேலும் கட்டிட பணிதொடர்ந்து செய்து வந்ததாலும், தூத்துக்குடி மாநகராட்சியும் நடவடிக்கை எடுக்காததாலும், மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P.(MD) No.20783/2021-ல் வழக்கு பதிவு செய்ததாகவும், இதன் மீது விசாரணை நடைபெற்ற போது உமா மகேஸ்வரி மற்றும் மரிய கவிதா பெயரில் கட்டிட அனுமதி வழங்கப்படவில்லை எனவும், மரிய கவிதா மற்றும் உமா மகேஸ்வரி ஆகியோரது பெயரில் கிரையம் செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையில், காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட்டதாகவும், மேற்கண்ட நபர்களின் பெயரில் உள்ள இடத்திற்கான காலிமனை வரி விதிப்பு எண் 138/011/902779 என ஒரே வரிவிதிப்பு எண்ணாக உள்ளது என்றும், எவ்வாறு ஒரே வரி விதிப்பு எண் இருவருக்கும் கொடுக்க முடியும் எனவும் மனுதாரர் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

மாநகராட்சி நகர அமைப்பு பிரிவு மூலம் திருமதி.மரிய கவிதா மற்றும் உமா மகேஸ்வரி ஆகியயோருக்கு அறிவிப்பு சார்வு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்காமல், கட்டிட அனுமதி பெறாமல், உமா மகேஸ்வரி மற்றும் மரிய கவிதாவுக்கு ஆகியோரின் இடத்திற்கான சொத்து வரி, குடிநீர் இணைப்பு மற்றும் கதவு எண் ஆகியவை மாநகராட்சியால் முறைகேடாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆவணத்தின் அடிப்படையில் 10.09.2020–31.12.2020 காலி மனை வரி விதிப்பு செய்ததாக கூறுகின்றனர். 31.12.2020–ல் உமா மகேஸ்வரி ஆவணங்களின்படி அந்த இடம் காலி மனை வரி விதிப்பு செய்யப்பட்டதாக கூறும் நாள் 31.12.2020–ல் ஸ்டேட் பாங்க் ஹவுசிங் சொசைட்டிக்கு சொந்தமான இடம் உமா மகேஸ்வரிக்கு காலி மனை வரி விதிப்பின் அடிப்படையில் ந.க.எண் சி3/2792/2023வ.ம நாள் 04.12.2023 RTI தந்த தகவலின்படி காலி மனை வரி விதிப்பின் அடிப்படையில் 14.01.2023 மற்றும் 09.03.2023–ல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்ட இடம் ஸ்பிக் சொசைட்டி இடம் அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடமும் ஸ்பிக் சொசைட்டி இடம் மற்றும் மாநகராட்சி ஆவண எண். 1054 மற்றும்

919/2020 ஆவணங்களின்படி State Bank Housing Society என்றே உள்ளது. இதனை மாநகராட்சி ஆவணங்களை பார்க்காமலேயே காலி மனை வரி விதிப்பு மற்றும் சொத்து வரி விதித்தது, முறைகேடானது. மாநகராட்சியில் உமா மகேஸ்வரி மற்றும் மரிய கவிதா ஆகிய இரு நபர்களும் 15.09.2023–ல் மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் கட்டிட அனுமதி வேண்டியும் இதற்காக உமா மகேஸ்வரி கனரா வங்கியில் ரூபாய் 18,000/–க்கான DD No.15526-ம் மரிய கவிதாவும் இது போன்று 15.09.2023ல் கட்டிட அனுமதி வேண்டி ரூ.15,000/–க்கான DD, State Bank DD 036349 எடுத்து கட்டி அனுமதி வேண்டி விண்ணபித்து உள்ளார்கள். 15.09.2020 கட்டிட அனுமதி கேட்டு விண்ணப்பதிற்கு முன்பே மரிய கவிதா பெயரில் குடியிருப்பு மற்றும் கடைக்கான தீர்வை 138/011/902875, 138/011/902882 நாள் 09.03.2023 மற்றும் உமா மகேஸ்வரி பெயரில் 138/011/902858 நாள் 14.01.2023 கடைத்தீர்வை 108/011/902886, 138/011/902887 நாள் 04.05.2023 வழங்கப்பட்டுள்ளது. மேலும், 18.09.2020 மாநகராட்சி ஆணையர் அவர்கள் மரிய கவிதா பெயரில் கட்டிட அனுமதி எண்.116/2020/F1 அன்று வழங்கப்பட்டு இருந்ததால் இக்கட்டிட அனுமதி இருக்க 15.09.2023ல் எதற்காக கட்டிட அனுமதி கேட்டு மாநகராட்சியில் விண்ணபித்தார்கள் என்றும், உமா மகேஸ்வரி மற்றும் மரிய கவிதா ஆகிய இருவருக்கும் கட்டிட அனுமதி மாநகராட்சியால் வழங்கப்படாமலும் உமா மகேஸ்வரி மரிய கவிதா ஆகிய இருவரும் 15.09.2023 கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பம் செய்வதற்கு முன்பே மாநகராட்சியில் மரிய கவிதா குடிநீர் மற்றும் கழிவு நீருக்கான 138/011/902858 ரசீதுடன் ரூ.10,000/–ம் பிளஸ் ரூ.5,000/– 25.01.23 கட்டிட அனுமதி பெறாத கட்டிடத்தின் மீது டெபாசிட் இருநபர் மரியகவிதா மற்றும் உமா மகேஸ்வரியும் பெற்றுள்ளார்கள். மேலும் மரிய கவிதாவுக்கு மாநகராட்சி 18.09.2020 கட்டிட அனுமதி எண்.116/2020/F1 மாநகராட்சி வழங்கப்படவில்லை. 21.08.2024 தமிழ்நாடு முறைமன்ற நடுவம் முன்பும் எனது புகாருக்கு பின்பே தாங்கள் செய்த தவறை மறைக்க தற்போது செயல்படுகின்றனர் எனவும், எனவே, பொய்யான கிரைய ஆவணத்தை வைத்து காலிமனை வரி விதித்து, அதே போல் பொய்யான கட்டிட அனுமதி அளித்து அதனை பயன்படுத்தி சொத்துவரி, குடிநீர் முன் பணத் தொகையும், கழிவு நீர் சாக்கடை ரசீதும் அதேபோல் கட்டிட அனுமதி கோரி 15.09.2023–க்கு முன்பே மேற்கண்ட முறைகேடு அனைத்தும் நடைபெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தூத்துக்குடி மாநகராட்சி அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் மேலும் தன்னுடைய மனுவில் கோரியுள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட எழில் நகர் தெருவில், சர்வே எண்.26/2–ற்கு ஸ்பிக் பணியாளர் குடியிருப்பில் மனைகளாக பிரிக்கப்பட்டது தொடர்பாக திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி என்ற பெயரில் கட்டிட அனுமதி எண்.116/2020/F1 நாள் 18.09.2020ல் வரைபட மற்றும் கட்டிட அனுமதி தூத்துக்குடி மாநகராட்சியால் வழங்கப்படவில்லை. மேலும் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தினை நிறுத்தக்கோரி இம்மாநகராட்சி நகரமைப்பு பிரிவு மூலம் திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு 09.11.2020 மற்றும் 26.06.2021ல் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது. திருமதி.மரிய கவிதா, அவருக்கு கிரைய பத்திரத்தின் அடிப்படையில் காலிமனை வரி விதிப்பு எண்.138/011/902779 நாள் 10.09.2020–ன்படியும் மற்றும் உமா மகேஸ்வரி அவருக்கு காலி மனை வரி விதிப்பு எண்.138/011/902785 நாள் 03.12.2020–ன்படி காலி மனை வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும் 17.03.2025 அன்று நடை பெற்ற முறைமன்ற நடுவர் அவர்களிடம் சமர்ப்பித்த அறிக்கையில் திருமதி.உமா மகேஸ்வரி அவர்களின் காலி மனை வரி விதிப்பு எண்.138/011/902785–க்கு பதிலாக 138/011/902758 என தவறுதலாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது எனவும், மேலும் காலி மனை வரி விதிப்பின் அடிப்படையில் திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு வரி விதிப்பு எண்.138/011/902875 நாள் 09.03.2023, 138/011/902882 நாள்

09.03.2023 மற்றும் 138/011/902858 நாள் 14.01.2023, 138/011/902886, 138/011/902887 நாள் 04.05.2023–ல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டது எனவும், சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.W.P.(M.D) No.20783/2021 நாள் 30.11.2023 உத்தரவிற்கு இணங்க மேற்படி மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட சொத்து வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் மின்வாரியத்திலிருந்து பெறப்பட்ட சர்வே எண்.26/2 கட்டிடத்தின் உண்மைத்தன்மை நிலை கோரப்பட்ட கடிதத்திற்கு திருமதி.மரிய கவிதா, திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோரின் கடை கட்டிடத்திற்கு சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண். W.P.(M.D) No.20783/2021 நாள் 30.11.2023 உத்திரவிற்கு இணங்க மேற்படி சொத்து வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டதாக மின் வாரியத்திற்கு தெரிவிக்கப்பட்டது எனவும், மேலும், கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி எண்.116/2020/F1 நாள் 18.09.2020ன்படி Tamil Nadu Mercantile Bank ல் அடமானக் கடன் பெறப்பட்டதாக கூறப்படும் கடை கட்டிடத்திற்கு திருமதி.மரிய கவிதா, க/பெ.அந்தோணிராஜ், திருமதி.உமா மகேஸ்வரி என்ற பெயரில் இம்மாநகராட்சியிலிருந்து கட்டிட அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்று Tamil Nadu Mercantile Bankற்கு தெரிவித்தும் அடமான கடன் பெற்றதாக கூறப்படும் கட்டிட வரைபட அனுமதி நகலினை இம்மாநகராட்சிக்கு அனுப்பி வைக்குமாறு 06.11.2024ல் Tamil Nadu Mercantile Bankக்கு தபால் அனுப்பப்பட்டுள்ளது.மேற்படி திருமதி.மரிய கவிதா, மற்றும் திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோருக்கு கட்டிட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி இம்மாநகராட்சிக்கு மனு ஏதும் விண்ணப்பிக்கப்பட வில்லை எனவும், மேலும் மனுதாரர் தூத்துக்குடி மாநகராட்சியால் திருமதி.உமா மகேஸ்வரி மற்றும் திருமதி.மரிய கவிதா ஆகியோரால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மாண்பமை உயர்நீதிமன்றத்தின் மதுரைகிளை சென்னை உயர்நீதிமன்றத்தின் (வழக்கு எண்.W.P(MD)No.20783 of 2021 நாள் 30.11.2023) உத்தரவின்படி அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துவது தொடர்பாக திருமதி.மரிய கவிதா, மற்றும் திருமதி.உமா மகேஸ்வரி ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு எண்.SLP(C) No.8069/2024 மற்றும் SLP(C) No.8099/2024 தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் தூத்துக்குடி மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மூலம் அறிய முடிகிறது.

மேலும், தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வார்டு B, Block-7, T.S. No.26/2–ல் அமைந்துள்ள 1.535 சென்ட் நிலத்தை, தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தாலுகா, முத்துகிருஷ்ணாபுரம், 10 வது தெரு, 47–ம் நம்பர் வீட்டில் வசிக்கும் பவர் ஏஜெண்ட் திரு. P. செல்வராஜ் அவர்கள் குமாரர் S. பொன்னுதுரை அவர்களிடமிருந்து தூத்துக்குடி பத்திர அலுவலகம் பத்திர ஆவணம் 1054/19 மூலம் கிரையம் பெற்றோம். இவ்விடத்திற்கான சொத்து வரி, தண்ணீர் வரி போன்றவை முறையாக தூத்துக்குடி மாநகராட்சிக்கு செலுத்தி வருவதாகவும், இந்நிலையில், தனது இடத்திற்கான வரி விதிப்பினை ரத்து செய்ததாக தூத்துக்குடி மாநகராட்சியின் தாக்கீது அளிக்கப்பட்டது எனவும், அதனால், உச்சநீதி மன்றத்தில் இது தொடர்பாக SLP(C) No.8069 of 2024 மற்றும் SLP(C) No.8099/ 2024 ஆகிய வழக்குகள் தாக்கல் செய்து, Stay Order பிறப்பிக்கப்பட்டு, நிலுவையில் உள்ளது என எதிர்மனுதாரர்களில் திருமதி உமாமகேஸ்வரி யின் சார்பாக அவரது கணவர் அளித்த வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் தொடர்பாக வழக்கு நிலுவையில் இருக்கும்பட்சத்தில் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 10 (3) (b)–ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 (3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the commission of inquiries Act, 1952 or any matter pending before a Court.

எனவே, மேற்கண்ட சட்ட பிரிவின்படி மனுதாரரின் **21.08.2024** நாளிட்ட மனு மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வழிவகை இல்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு மே திங்கள் 27ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. A. ராஜவேல்,
69/C, டூவிபுரம், 2வது தெரு,
தூத்துக்குடி–628 003.

(2) திருமதி உமா மகேஸ்வரி,
க/பெ முருகன்,
111/96C, போல்பேட்டை,
எழில் நகர், தூத்துக்குடி–628 002.

(3) திருமதி மரியா கவிதா,
111/96D, போல்பேட்டை,
எழில் நகர், தூத்துக்குடி–628 002.

(4) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(6) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

28/5/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032